திசை
THISAI

## பேச்சுவார்த்தைக்கு ஆதரவு

இலங்கை அரசும் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கமும் நேரடிப் பேச்சுக்கள் நடத்தவிருப்பதை நாம் வரவேற்கின்றோம்.

—கே. பத்மநாபா (ஈ. பி. ஆர். எல். எவ். செயலாளர் நாயகம்)

இலங்கை அரசுடன் தமிழீழ விடுதலைப் புலிகள் பேச்சுவார்த்தை நடத்த இணங்கியுள்ளமையை ரெலோ வரவேற்கிறது.

—ஜானி, ரெலோவின் வன்னி மாவட்டத் தளபதி)

(12ஆம் பக்கம் பார்க்க)

MUSLIM CONGRESS
COLOMBO

திசை 1 29-4-1989 சனிக்கிழமை விலை : ரூபா 3-50 முகம் 16

# பூர்வாங்கப் பேச்சுவார்த்தை புதுவழி காட்டுமா?

**"1988 லேயே நான் விடுதலைப்புலிகளோடு பேச்சுவார்த்தை நடத்துவதற்கு முயற்சித்தேன். ஆனால் இந்தியாவின் நிர்ப்பந்தம் என்னைத் தடுத்துவிட்டது. 1987 இல் வடமாராட்சித் தாக்குதலுக்குப் பின்னரும் 1988 ஜனவரியின்போதும் நான் பேச்சுவார்த்தைக்கு ஒழுங்குகள் செய்தேன். ஆனால் முடியவில்லை"**

இவ்வாறு முன்னைய பாதுகாப்பு அமைச்சர் லலித் தற்போது அரசாங்கத்துக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையில் இடம்பெற்று வரும் பூர்வாங்கப் பேச்சு வார்த்தை சம்பந்தமாகக் கருத்துத் தெரிவித்தபோது கூறினர்.

இவரின் இக்கூற்றைச் சாட்டாக வைத்து இது பற்றி கருத்துத் தெரிவித்த தமிழ் அரசியல் அவதானி ஒருவர் பின்வருமாறு கூறினர்.

"இலங்கைவாழ் தமிழ்பேசும் இனம் இந்தப் பேச்சுவார்த்தைகளுக்கும் ஒப்பந்தங்களுக்கும் நீண்ட காலமாகப் பழக்கப்பட்டது. 1918இல் இடம்பெற்ற ஜேம்ஸ் பீரிஸ் — சேர் பொன். அருணசலம் பேச்சுவார்த்தை, 1925இல் சி.ஈ. கொரியாவுக்கும்—வைத்திலிங்கம் துரைசாமிக்கும் இடையில் ஊர்காவற்றுறையில் இடம்பெற்ற ஒப்பந்தம், 1957 இல் இடம்பெற்ற பண்டா-செல்வா ஒப்பந்தம் 1965இல் ஏற்பட்ட டட்லி — செல்வா உடன்படிக்கை, '1985 இல் நடைபெற்ற திம்பு பேச்சுவார்த்தை, 1987இல் ஏற்பட்ட ஜே.ஆர்.—ராஜீவ் ஒப்பந்தம் என்று தமிழ்பேசும் இனம் இந்த ஒப்பந்தங்களுக்கும் பேச்சுவார்த்தைகளுக்கும் பழக்கப்பட்டதாகும். ஆனால் இதுகாலவரை தமிழ்பேசும் இனம் மேற்படி ஒப்பந்தங்கள் பேச்சுவார்த்தைகளின் பின்னர் சிங்களவர்களால் ஏமாற்றப்பட்டவர்களாகவே வந்துள்ளனர். தற்போது விடுதலைப் புலிகளுக்கும் அரசாங்கத்துக்கும் இடையில் பேச்சுவார்த்தை இடம்பெற்று வருகிறது. இது பலன் தருமா? இதற்கும் முன்னைய ஒப்பந்தங்களுக்குமுள்ள வித்தியாசம் என்ன? என்பனவற்றை அறிய தமிழ் பேசும் மக்கள் ஆவலாய் உள்ளனர்'' என்று கூறிய அவர், தனது கருத்தை மேலும் பின்வருமாறு தெரிவித்தார்.

"இதுகாலவரை இந்தியா, இலங்கைத் தமிழ் பேசும் மக்களின் நண்பனுகவும் ஆதரவு தரும் அண்டை நாடாகவுமே இருந்து வந்துள்ளது. ஆனுல் இலங்கை அரசியல் வாதிகளின் ராஜதந்திரம் இன்றிந்த நிலையை மாற்றுவதில் வெற்றி கண்டுள்ளது. அந்த வெற்றியினுல் அவர்களுக்கு இந்தியாவையும் அதன் ராணுவத்தையும் எமது பிரச்சினையிலிருந்தும் இலங்கையிலிருந்தும் வெளியேற்றுவது தான்நோக்கமாக இருக்கலாம். அதனுல் இலங்கையரசு இதயசுத்தியுடன் எமதுபிரச்சினையில் நடந்து கொள்ளுமென்று எதிர்பார்க்க முடியாது. ஆனுல் அதே நேரத்தில் அவர்கள் விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தைக்கு இணங்கியுள்ளமை அதன் முக்கியத்துவத்தை அவர்கள் கணக்கில் எடுத்ததையே காட்டுகிறது. எனவே வேறுபலரும் கூறியுள்ளது போல் விடுதலைப் புலிகளோடு இணக்கங்காணுதை எந்தத் தீர்வும் பிரச்சினையைத் தீர்த்து வைக்கப் போவதில்லை என்பதின் மறைமுகச் சுட்டுதலாகவும், இதைக் கொள்ளலாம்.

புதிய ஜனுதிபதி பல வகையான கடந்த கால அனுபவங்களின் கூட்டு மொத்தமாகத் திகழ்வதால், இதை ஓர் வெற்றிக்குரியதாகவே முடிக்க முயலலாம். ஆனுல் இதற்கு இந்திய அரசு, வடகிழக்கு மாகாண அரசு, முற்போக்குச் சக்திகள் யாவும் அக்கறையும் அனுசரணையும் கொடுத்தால் இது வெற்றி அடையலாம்.''

## பேச்சுவார்த்தையும் கிழக்கு மாகாணமும்

இலங்கை அரசுக்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையில் நடைபெறும் பேச்சுவார்த்தை சம்பந்தமாக எமது அரசியல் நிருபர் பின்வருமாறு சில கருத்துகளை தந்துள்ளார்.

ஆயுதம் ஏந்திய தமிழ் இளைஞர்களின் உத்தியோகபூர்வப் பிரதிநிதியுடன், இலங்கை அரசு முதல் தடவையாக நேரடியாக நடத்தும் பேச்சுவார்த்தை இதுவே. இந்தவகையில் இது வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்தது. இருசாராரும் அமைதிப்படை வெளியேற வேண்டும் என்று விரும்புகின்றனர்.

ஆனுல் இவர்களின் இந்த நோக்கத்தின் தீவிரத்தை நொய்தல் படுத்தல்போல, அமைதிப்படை வடகிழக்கிலிருந்து வாபஸ்பெற உத்தேசித்துள்ளதாக ராஜீவ்காந்தி கூறியுள்ளார். ஆனுல் ஒரு நிபந்தனை : இந்திய—இலங்கை ஒப்பந்தத்தினுல் ஏற்பட்டுள்ள பலன்கள், முன்னேற்றங்கள் பாதிக்கப்படக்கூடாது. அப்படியானுல் இது தேளின் விஷம் கொடுக்கில்தான் உள்ளது என்பது போன்ற கதையா? அதாவது இந்தியா 'றிமூற் கொன்ரூேல்'(Remote Control) மூலம் இப்பேச்சுவார்த்தையைக் கட்டுப்படுத்த விரும்புகிறதா?

கிழக்கு மாகாணத்தைப் பொறுத்தவரையில் குறிப்பாக

(12ஆம் பக்கம் பார்க்க)




## இந்த நூல்களுக்கும் அந்தக் கதியோ?

1987-ஆம்ஆண்டு பிற்பகுதியில் நடைபெற்ற யுத்தத்திற்குப் பின்னர், இந்திய அரசாங்கம் யாழ். பொது நூலகத்திற்கு பல அரிய நூல்களை வழங்கியது.

அவை இன்னும் வகைப்படுத்தப்படாது, வாசகர்களின் கைகளுக்கு எட்டாது, தூங்குகின்றன என அறியப்படுகிறது.

திங்கட்கிழமை (24-4-89) அமெரிக்கத் தூதுவர் ஏறக்குறைய ரூ. 6 இலட்சம் பெறுமதியான நூல்களை யாழ். பொது நூலகத்திற்கு அன்பளிப்புச் செய்தார்.

இந்நூல்களை வாசிக்கும் பாக்கியம் எத்தனை ஆண்டுகளுக்குப் பின் வாசகர்களுக்கு கிடைக்குமோ?

## ரெலோ தளபதிகளில் ஒருவர் கைது

ரெலோ இயக்கத் தளபதிகளில் ஒருவரான ரஜனி என்பவர் இந்தியப் படையினரால் கைது செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக ரெலோ இயக்கத்தின் முக்கியஸ்தர்கள் தமது ஆட்சேபனையை இந்திய தூதரக அதிகாரிகளுக்குத் தெரிவித்துள்ளதாகவும் தெரியவருகிறது. ஏற்கனவே யாழ். மாவட்டத்தில் உள்ள சில ரெலோ முகாம்கள் மூடப்பட்டதும் தெரிந்ததே.

'சற்றடே றிவியூ'வின் சகோதர வாரப் பத்திரிகை

**திசை**
THISAI

ஆசிரியர்:
மு. பொன்னம்பலம்

சந்தா விபரங்கள்:
(உள்நாட்டுத் தபாற் கட்டணத்தையும், வெளிநாட்டுத் தபாற் கட்டணத்தையும் உள்ளடக்கியது.)

இலங்கை
ஒரு வருடம்-ரூபா: 200/-
அரைவருடம்-ரூபா: 100/

இந்தியா
ஒரு வருடம்-ரூபா: 300/-
(இந்திய ரூபா)

சிங்கப்பூர் / மலேசியா
ஒரு வருடம் –
யு.எஸ்.டொலர் 40

ஏனைய நாடுகள்
ஒரு வருடம் –
யு.எஸ்.டொலர் 60

காசோலைகள் அனைத்தும் நியூ ஈரா பப்ளிகேஷன்ஸ் லிமிட்டெட் (New Era Publications Ltd.) என்றே, எழுதப்பட வேண்டும்.

பத்திரிகை விநியோகம், சந்தாப்பணம், விளம்பரம் போன்ற நிர்வாகத் தொடர்பு முகவரி:

118, 4ஆம் குறுக்குத்தெரு,
த. பெ. 122,
யாழ்ப்பாணம்.


# மேதினத்தின் படிப்பினைகள்

மேதினம் என்பது ஒரு பண்டிகை அல்ல. களியாட்ட விழா அல்ல. தொழிலாளர்கள் ஒய்வு கொள்ளும் விடுமுறை தினமுமல்ல. மாறாக, உலகெங்குமுள்ள வீரத் தொழிலாளர்கள் சகல வேறுபாடுகளையும் ஒதுக்கிவிட்டு வர்க்க அடிப்படையில் ஒன்றுபட்டு ஒரே குரலில் தமது லட்சியத்தைப் பிரகடனப்படுத்தும்நாள். சுரண்டும் வர்க்கத்திற்கெதிராக சுரண்டப்படும் வர்க்கம் கடந்த காலங்களில் தானாற்றிய வீரப் போராட்டங்களை நினைவுபடுத்தி எதிர்கால போராட்டங்களுக்கு விண்ணை அதிரவைக்கும் வீரசபதம் செய்யும் நாள். ஆளும் வர்க்கத்தின் மீது தனக்குள்ள கடனைக் கணக்குத் தீர்ப்பதற்கு உலக தொழிலாள வர்க்கம் தனது ஒற்றுமையை ஒத்திகை பார்க்கும் ஒப்பற்ற திருநாள்.

இந்த மகத்தான நாளில் உலகெங்குமுள்ள தொழிலாள வர்க்கம் குறைவான வேலை நேரத்திற்காகத் தான் பல பத்தாண்டுகள், ஏன் நூற்றாண்டுகளாய் நடாத்திய போராட்டங்களையும், ஆற்றிய தியாகங்களையும், சிந்திய ரத்தத்தையும் நினைவு கூருகிறது. கடந்த கால படிப்பினைகளிலிருந்து எதிர்கால திட்டங்களைச் சரிபார்த்துக் கொள்கிறது. தனதும் உலக மக்களினதும் விடுதலைக்குப் பாதை சமைக்கிறது.

ஆம், மேதினம் ஒரு தற்செயலான சம்பவத்தால் பிறந்ததல்ல. ஒரு நூற்றாண்டுக்கு மேலாக தொழிலாளர்கள் தமது வேலை நேரத்தை வரையறுப்பதற்காக நடாத்திய இடைவிடாத போராட்டத்தின் உச்சக்கட்டமே மேதினம், அந்த வரலாற்றை அப்படியே முழுமையாக வடித்தால் அதுவே ஒரு வீரகாவியம் ஆகிவிடும்.

மே தினத்தின் நீண்ட வரலாறு உழைக்கும் மக்களுக்கு பயனுள்ள பல படிப்பினைகளை வழங்குகிறது. அவற்றை இங்கு ஓரளவாவது மேலோட்டமாக வேனும் குறித்துக் கொள்வோம்.

(1) 'எட்டு மணித்தியால' வேலை நேரம் எவ்வாறு நிர்ணயிக்கப்பட்டது? ஆளும் வர்க்கம் தொழிலாளர் படுகின்ற துயரத்தையும் அவலத்தையும் பார்த்து மனம் உருகிப் போய் சலுகை காட்டியதா? அல்லது வானத்திலிருந்து அது அருள் மழையாகப் பொழியப்பட்டதா?

இல்லை ...... தொழிலாளர்களின் சொந்த முயற்சியாலும் அளப்பரிய தியாகம் செறிந்த வீரத்தோடு ஒரு நூற்றாண்டுக்கு மேலாக நடாத்திய இடைவிடாத போராட்டத்தின் பயனாகவும் தான் அது வென்றெடுக்கப்பட்டது.

தொழிலாளர்களின் உரிமைகள் தயவால் கிடைப்பவையல்ல. தியாகம் செறிந்த வீரத்துடன் கூடிய ஈவிரக்கமற்ற போராட்டத்தில் வென்றெடுக்கப்படுபவை.

(2) உரிமைகள் போராடிப் பெறுபவை என்றால் எவ்வாறு? தன்னலங் கருதாத, வீரமும் தியாகமும் செறிந்த, லட்சியத்திற்காக தம்மை அர்ப்பணித்த, நல்லெண்ணமும் உணர்வும் உள்ள தனி நபர்களும், ஒரு சில கோஷ்டிகளும் ஆயுதம் ஏந்தி போராடுவதன் மூலம் மாத்திரம் உரிமைகள் கிடைத்து விடுமா? பரந்துபட்ட மக்களின் உத்வேகம் பெற்ற இயக்கமாக மாறாத வரைக்கும் நியாயமான போராட்டங்கள் கூட வெற்றி பெறுவதில்லை.

ஒன்றேடொன்று தொடர்பற்ற, தன்னெழுச்சியாக ஆங்காங்கே தொழிலாளர்கள் நடாத்திய வேலை நேரக் குறைப்புக்கான போராட்டத்தைக் கூட ஆளும் வர்க்கம் எளிதில் அடக்கி விடவில்லையா?

எவ்வாறு அவர்களது போராட்டம் வெற்றி பெற்றது?

முதலாவதாக, தொழிலாள வர்க்கம் தன்னை ஒரு தூய சக்தியாக, சந்தர்ப்பவாத தலைவர்கள் நோய்க் கிருமிகளாகத் தொற்றிய போதெல்லாம் அவர்களை நிராகரித்து ஒதுக்கி விட்டு, தன்னை முதலில் ஸ்தாபனப்படுத்திக் கொண்டது.

இரண்டாவதாக, தனது '8 மணித்தியால வேலை' என்ற லட்சியத்தை தெளிவாக வரையறுத்துக் கொண்டு அதற்குப் பரந்தளவில் மக்களை பங்கெடுக்க வைத்தது. பெருமளவில் ஆதரவு திரட்டியது, சகல தொழிற்சங்கங்களையும், அரசாங்க ஊழியர்களையும் அணி திரட்டியது. சாத்தியமான சகல கட்சிகளினதும் ஆதரவைப் பெற்றது.

மூன்றாவதாக, சர்வதேச தொழிலாளர்களின் ஆதரவைப் பெற்று தனது பலத்தையும் மன உற்சாகத்தையும் வளர்த்துக் கொண்டு போராடியதன் விளைவாகத் தான் வெற்றி கிடைத்தது. எனவே எந்த ஒரு போராட்டத்தின் வெற்றிக்கும் மூன்று முன் நிபந்தனைகள் உண்டு.

ஒன்று ஸ்தாபனம். இரண்டு, சரியான லட்சியமும் அதனை அடைவதற்கான சரியான மார்க்கமும் பரந்துபட்ட மக்களின் உணர்வு பூர்வமான பங்கெடுப்பும். மூன்று, சர்வதேச தொழிலாளரின் ஒத்துழைப்பு.

(3) மக்கள் போராட்டங்களை ஆளும் வர்க்கம் எவ்வாறு முகங் கொடுக்கிறது?

மக்கள் போராட்டங்களை ஆளும் வர்க்கம் கைகட்டி மௌனமாகப் பார்த்துக் கொண்டிருப்பதில்லை.

அ) அது மக்கள் ஸ்தாபனங்களையும் ஐக்கியத்தையும் சீர்குலைக்க பல்வேறு வழிகளைக் கையாள்கிறது.

ஆ) மக்கள் போராட்டம் ஓங்கி வரும் போது ஜனநாயகத்தின் முகமூடி கிழிக்கப்பட்டு உண்மைச் சொரூபம் வெளிப்படுகிறது.

இ) மிருகத்தனமான பலாத்காரத்தால் மக்களின் போராட்டத்தை நசுக்க முயல்கிறது.

ஈ) கருங்காலிகளின் உதவியுடன் போராட்டத்தை முறியடிக்க முனைகிறது.

(4) ஆளும் வர்க்கம் தொழிலாள வர்க்கத்தின் சித்தாந்தத்தையும் போர்க்குணத்தையும் மழுங்கடிக்க சகல உத்திகளையும் கையாள்கிறது.

(5) சரியான சித்தாந்த வழிகாட்டலோடு செயற்படத் தொடங்கினால், உலகின் எந்த சக்தியும் தொழிலாள வர்க்கத்தின் பயணத்தைத் தடுத்து நிறுத்திவிட முடியாது.

தற்காலிகமாக ஆளும் வர்க்கம் வெற்றி பெறலாம். ஆனால் இறுதியில் வெற்றி பெறுவது தொழிலாளவர்க்கமே! ஏனெனில் அதுதான் தியாகஞ் செறிந்த, வீரம் பொருந்திய, புரட்சிகரச் சக்தி. இழப்பதற்கு அதனிடம் எதுவுமில்லை; அடிமைச் சங்கிலியைத் தவிர. ஆனால் அதற்கு வெல்வதற்கோ பரந்ததோர் உலகம் உண்டு. இதுதான் மே தினம் உணர்த்தும் பாடம்.

இன்று மார்க்ஸ் இலங்கையில் இருந்தால் மேதின லட்சியங்களை அடைவதற்கு இலங்கைத் தொழிலாளருக்கு இப்படித்தான் அறிவுரை கூறுவார்: ''சிங்களவர் அல்லாத பிற தேசிய இனங்களை ஒடுக்குவதற்கு சிங்கள பூர்ஷ்வாக்களுக்கு, ஒத்துழைப்பு நல்கிக் கொண்டிருக்கும் வரைக்கும் சிங்களப் பாட்டாளி வர்க்கம் தனது விடுதலையைப் பெற முடியாது.

சிங்களப் பாட்டாளி வர்க்கத்தை வெறுத்து ஒதுக்கி விட்டு தமிழ்ப்பாட்டாளி வர்க்கம் தனது விடுதலையை வென்றெடுக்க முடியாது.''

நன்றி: பீ. ஏ. காதர் எழுதிய மேதின வரலாறும் படிப்பினைகளும். 1982 □


அமெரிக்கா, ஜேர்மனி,
பிரான்ஸ், கனடா, லண்டன்,
போன்ற நாடுகளுக்கு
செல்ல விரும்புகின்றவர்கள்
எம்மைத்
தொடர்பு கொள்ளவும்.

பாஃரேன் (Bahrain)
உடனடி வேலைவாய்ப்பு

தொழிலாளர் (கூலியாட்கள்), மேசன், தச்சு வேலையாளர், டீசல் - பெற்றோல் மெக்கானிக், ஓட்டோ எலக்ரிசன், எலக்ரிசன்ஸ் (வீட்டு வயரிங்) முதலியவற்றிற்கு
உடனடியாக ஆட்கள்
தேவை
சாப்பாடு, இருப்பிடவசதி
இலவசம்

**V. T. R. TRAVELS**
41, 3rd Cross Street,
JAFFNA
A–10


# ஸ்ராலின் மனிதாபிமானியா?


ஆசிரியர்,
'திசை'

திசையின் 12 ஆவது இதழில் உருளும் உலகில் பகுதியில் யூத தேசிய இனம், அதில் ஸ்ராலினின் மனிதாபிமானம், பற்றி வந்த வ. நடராஜன் என்பவரின் விமர்சனம் பற்றிய எனது கருத்து.

...அடுத்து விமர்சகர் ஒரு குட்டிக்கதையையும் கூறி அதனூடாக சொல்ல முயலும் ஸ்ராலினின் மாபெரும் மனிதாபிமானம் பற்றியும் அவரது தூய்மைவாதம் பற்றியும் பார்ப்போம்.

ரஷ்யாவில் ஏற்பட்டிருந்த யூதர்களின் பிரச்சினையை தீர்ப்பதற்கு ஸ்ராலின் கையாண்ட வழியே யூதர்களுக்கு இஸ்ரவேலை உருவாக்க உதவியதற்கான காரணமே தவிர, அது அவரது மனிதாபிமானத்தால் அல்ல என்பதை விமர்சகர் விளங்கிக் கொள்ள வேண்டும்.

சரி, விமர்சகர் கூறுவது போல் ஸ்ராலின் மனிதாபிமானத்தால்தான் யூதர்களுக்கு உதவினார் எனக் கொண்டால், ஜேர்மனியில் கிட்லரின் சர்வாதிகாரம் தலைவிரித்தாடிய போது கிட்லருக்கு MIG-19 யுத்த விமானங்களை ''பொலிட் பீரோ'' வின் எதிர்ப்பையும் மீறி ஏன் விற்பனை செய்தார். இதுவும் மனிதாபிமானத்தினால் தானா? பின்னர் இதே யுத்த விமானங்களினால் தான் சோவியத் யூனியனையே கிட்லர் தாக்கினான். ஸ்ராலின் கிட்லருக்கு உதவியதற்கும் ஓர் அடிப்படைக் காரணம் இருந்தது. அதாவது ஜேர்மனி அன்று சோவியத்தைவிட கைத்தொழில் வளர்ச்சி அடைந்த ஒரு நாடாயிருந்தது. அங்கு கொம்யூனிஸப் புரட்சி வெற்றியளித்தால் சோவியத் யூனியனைவிட ஒரு பலம் பொருந்திய சோஷலிஸ நாடு உருவாகி, அது சோவியத்தையும் விஞ்சி விடுமென்ற அச்சமே அதற்கான காரணமாகும். எனவே இங்கு தனது அரசின் நலனில்தான் ஸ்ராலின்



அக்கறை காட்டினரே தவிர, கொள்கையோ, மனிதாபிமானமோ அங்கு முன்னிற்கவில்லை.

இதனைவிட ஸ்ராலினின் வேறும் சில மனிதாபிமானங்களை எடுத்துக்காட்ட விரும்புகிறேன். ஸ்ராலின் ஆட்சியில் 1936–38 காலத்தில் ஸ்ராலினுக்கு முரணான கருத்தைக் கொண்டிருந்தவர்கள் பத்தாயிரக் கணக்கில் கைது செய்யப்பட்டு சிறைகளிலடைக்கப்பட்டார்கள். ஆயிரக்கணக்கானோர் சுட்டுக் கொல்லப்பட்டார்கள். ஸ்ராலினின் நெருங்கிய நண்பர்கள்கூட சுட்டுக்கொல்லப்பட்டார்கள். 1956 பெப்ரவரியில் 20ஆவது கட்சிப் பேராயத்தில் ஸ்ராலினின் வெறித்தனமான கொலைகள் பற்றி பேசிய குருஷ்சேவ் "கடந்த இரண்டு ஆண்டு காலப்பகுதியில் (1936-38) 7679 பேர் சுட்டுக் கொல்லப்பட்டதாகவும், 1934 இல் வெற்றிப் பேராயம் என்றழைக்கப்பட்ட மாநாட்டில் கட்சியின் மத்திய குழுவுக்கு தேர்ந்தெடுக்கப்பட்ட 134 உறுப்பினர்களில் 98 பேர் 1937–38 காலத்தில் கைது செய்யப்பட்டு கொல்லப்பட்டனர், என்றும் தெரிவித்தார். (ஆதாரம் ''ஸ்ராலின் சகாப்தம்'', பக்கம் -106, அன்னா லூயிஸ்ட்ராங்) இவ்வாறு தனது நெருங்கிய நண்பர்களையே கொன்று குவித்தமையும் மனிதாபிமானமா? தனது சொந்த தேசத்திற்குள், அதுவும் தனது நெருங்கிய நண்பர்களிடம் கூட மனிதாபிமானம் காட்டாத ஸ்ராலின் யூதர்கள் மேல் மனிதாபிமானம் காட்டினார் என விமர்சகர் கூறுவதுதான் ரொம்பவும் வேடிக்கையாக உள்ளது.

எஸ்.முகுந்தன்
கலாசாலை வீதி,
திருநெல்வேலி.

# அவுஸ்திரேலிய தனியார் கல்லூரிகளால் ஏமாற்றப்படும் ஆசிய மாணவர்கள்

ஆசிய நாட்டு மாணவர்களுக்கு ஆங்கிலம் அல்லது வர்த்தகக் கல்வி கற்பிக்கும் அவுஸ்திரேலிய தனியார் கல்லூரிகள், கடந்த இரண்டாண்டுகளில் பெருமளவு மாணவர்களை ஏமாற்றத்திற்குள்ளாக்குயுள்ளன.

அவுஸ்திரேலியாவில் இப்பொழுது இத்தகைய கல்லூரிகள் ஐம்பதுக்கு மேல் உள்ளன. ஆசிய மாணவர்கள் தொகை மேலும் உயருமென எதிர்பார்த்து, அவுஸ்திரேலிய அரசு மேலும் பலநூறு கல்லூரிகளை உருவாக்க அனுமதி வழங்கியுள்ளது.

இக்கல்லூரிகள் ஆசிய மாணவர்களைப் பெருமளவில் கவருவதன் காரணம் என்ன ? அமெரிக்க அல்லது ஆங்கிலேய கல்விநிலையங்களை விட குறைந்த கட்டணத்தில் பாடத்திட்டங்களை இவை தருகின்றன. ஆனால் குறைந்த கட்டணத்திற்குத் தக்கதாக குறைந்த தரத்திலான கல்வியே இங்கு கிடைக்கிறது.

'த நியூ ஒஸ்ரேலியன் இன்ரர்நஷனல் இங்லிஸ் கொலேஜ்' (The New Australian International English College) எனும் பெயருடைய கல்லூரியைப் பார்வையிடச் சென்றபோது அங்கே, ஒரு அறை (கரும்பலகையும் சில மேசைகளும் கதிரைகளும்) யும் ஆண் பெண் இருபாலாரும் பகிர்ந்துகொள்ள, ஒரு கழிவறையும் மட்டும் இருந்தன.

சிட்னியில் இருக்கும் ஆசிய மாணவரில் ஒரு பிரிவினர் மாணவர்களை ஏமாற்றும் சில கல்லூரிகளைக் குறிப்பிட்டனர். றிசெப்ஷனிஸ்ற் சென்ரர் (Receptionist Centre) எனும், அவுஸ்திரேலியாவின் பிரதான நகரங்களில் கிளைகளைக் கொண்ட கல்லூரியிடம், ஐம்பத்திரண்டு மாணவர்கள் 250,000 அவுஸ்திரேலிய டொலர் நட்டஈடு கோரியுள்ளார்கள் என்று, ,சிட்னி மோர்ணிங் ஹெறால்ட் பத்திரிகை 1988 ஒகஸ்ற் 4இல் செய்தி வெளியிட்டது.

6000 டொலர் பணத்தைக் கட்டிய மாணவர்கள் தாம் விளம்பரப் பிரசுரங்களால் தவருக வழிநடத்தப்பட்டதாகவும், தாம் பெறப் போகும் டிப்ளோமா தாம் நம்பியபடி சர்வதேச ரீதியில் ஏற்றுக்கொள்ளத்தக்கதல்ல என்றும், உரிமைப் பிரச்சினை கிளப்பியதாக 'ஹெறால்ட்' பத்திரிகையில் வெளிவந்த ஒரு கட்டுரை, சுட்டிக்காட்டியது.

இடைநடுவில் தன் கல்வியை மற்றொரு கல்லூரிக்கு மாற்றிய மாணவன் ஒருவன் [illegible] இல்லை. பாடநேரங்களில் எங்களை வீடியோ பார்க்கச் செய்தார்கள். ஆயிரக்கணக்கில் டொலர்களைத் தந்த உங்களுக்கு இதுதான் பாடத்திட்டம் என்று அவர்கள் சொன்னார்கள்''.

இம்மாணவர்கள் தம் உரிமைக் கோரிக்கையை 'சிட்னி கொன்சியூமேர்ஸ் கிளெய்ம்ஸ் ட்றிபியூனல்' (Sidney Consumers Claims Tribunal) மூலம் அனுப்பியுள்ளார்கள். குறைந்த வருவாயுள்ளவர்கள், சட்ட நடவடிக்கைகளில் ஏற்படும் உயர் செலவினங்களைத் தவிர்க்கவென, உருவாக்கப்பட்ட நிறுவனம் இது.

இவ்வழக்கு விசாரணைக்கு எடுக்கப்படுதற்கு முன்னர், எப்படியோ, விசாரணைகளை இடைநிறுத்தம் செய்யும் சுப்ரீம் கோர்ட் உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

மாணவர்கள் வெளிநாட்டைச் சேர்ந்தவர்களாகையால், அவர்கள் சார்பில் நீதிமன்றத்திற்கு எவ்வித நியாயாதிக்கமுமில்லை என்று, காரணம் காட்டப்பட்டது. இவ்விபரம் 'சிட்னி மோர்ணிங் ஹெறால்ட் (4.8.88) இல் வெளிவந்தது.

□ T. J. தன் □

'றிசெப்சனிஸ்ற் சென்ரரின்' எதிர்வாதம் அற்புதமானதும் வெறுக்கத் தக்கதுமென, நீதிமன்ற அலுவலர் கேய் மூறெல் (Gay Murrel) என்பவர் கண்டித்தார். ஆங்கிலக் கல்வி நிறுவனம் ஒன்றின் அலுவலர் ஒருவர், பெயர் வெளியிட விரும்பாது, ''மாணவர்களின் அடிப்படை உரிமை மறுக்கப்படுகிறது. ஆங்கில அறிவின்மை அவர்களுக்கு எதிலும் தடையாகவுள்ளது. யாருக்கு முறையிடுவதென்று அவர்கள் கவலைப்படுகிருர்கள். இதனைப் பல தனியார் கல்லூரிகள் தமக்குச் சாதகமாக எடுத்துக் கொண்டுள்ளன'' என்கிருர்.

வெளிநாட்டு மாணவர் அலுவலகத்தின் சமஷ்டித் தலைமையகம், விசாரணை முடிவு பெறும் வரை கல்வி நிலையத்தின் அங்கீகாரத்தை வாபஸ் பெற்றுக்கொண்டமை, கல்வி நிலையத்திற்கு பெரும் அடியாக அமைந்தது, அவுஸ்திரேலிய குடிவரவுத் திணைக்களம், அங்கீகாரம் பெறும் கல்லூரிகளுக்கு மாத்திரம் மாணவர்களைச் சேர்க்க அனுமதி வழங்க முடியுமென்ற காரணத்தால், றிசெப்சனிஸ்ற் சென்ரர் பணம் பெருக்கும் வாய்ப்பில் பெரும் வீழ்ச்சியை எதிர்கொண்டது.

ஒரு மாதத்தின் பின்னர், சென்ரர் வெளிநாட்டு மாணவர் அலுவலகத்திற் கெதிராக [illegible] போது, கல்வி நிலையத்தின் அங்கீகாரம் திருப்பித் தரப்பட்டது. வெளிநாட்டு மாணவர் ஒன்றியத்திற்கு தனியார் அல்லது பொதுக் கல்விப் பிரச்சினையில் தலையிட உரிமை கிடையாது என்ற வாதத்தின் அடிப்படையில், சென்ரர் சட்ட நடவடிக்கையில் இறங்க நினைத்திருந்தது போலும்.

ஆனல் அரச மட்டத்தில், நியூ சவுத் வேல்ஸ் கல்வி அமைச்சர் ரொனி மெதெரேல் (Tony Metherell) தனியார் கல்லூரிகள் பற்றி, வெளிப்படையாகவே, 'தனியார் நிறுவனங்கள் மீது தன் அதிகார ஊடுருவலை' தவிர்த்துக் கொள்ள விருப்புவதாக கூறிவிட்டார். (ஹெறால்ட், ஆகஸ்ற் - 88). ஆக, இன்றுவரை சிட்னியிலுள்ள தனியார் கல்லூரிகள் அரச கட்டுப்பாடின்றி சுதந்திரமாக இயங்கி வந்தன.

குறிப்பிட்டதொரு கல்வித்துறைக்குப் பொருத்தமான மாணவர்களைத் தெரிவு செய்வதில் நிலவும் பாகுபாடு மாணவர் தரும் பணத்தைப் பொறுத்தது.

கொரிய மாணவன் கிம் யங்சூ ஒரு உதாரணம். இவன் 1500 அவுஸ்திரேலிய டொலர்களை பத்து வார ஆங்கிலப் பாடத்திட்டத்திற்காக, சிட்னி தனியார் கல்லூரி ஒன்றில் கட்டினன். இக்கால முடிவில் பயிற்சிக் காலம், பெற்ற ஆங்கில தேர்ச்சியின் தரம் கொண்ட 'பட்டச் சான்றிதழ்' அவனுக்கு வழங்கப்பட்டது. அது 'ஆரம்ப தரம்'. அவனது விடைத்தாளில் தன் பெயரையும் சில கேள்விகளுக்கு விடைகளையும் (பிழையாக) எழுதியதைத் தவிர, மீதி எல்லாம் வெறுமையாக இருந்தது.

'இந்த மாணவர்கள் எப்போதுமே ஒரு தராதரப் பத்திரம் பெறத் தவறுவதில்லை' என்றும் 'அவர்களுக்கு ஆங்கில அறிவு சிறிதுமில்லை என்ருல் நாங்கள் அவர்களை 'ஆரம்ப' வகுப்பிலேயே வைத்திருக்கிறோம்' என்றும் ஒரு பாடசாலை ஆசிரியர் குறிப்பிட்டார்.

ஆங்கிலத்தை இரண்டாவது மொழியாகக் கற்பிக்கும் ஆசிரியர்களால், இக்கல்லூரிகளில் ஆங்கிலம் போதிக்கப்படுகிறது. கற்பிக்கும் மொழிமூலம் ஆங்கிலம். சிறிதளவாவது ஆங்கில அறிவு இல்லாதவர்கள் இத்திட்டத்தால் லாபமடைய முடியாது. ஆனல் ஆங்கிலக் கல்லூரிகள் மாணவர்களை மேன்மேலும் சேர்த்துக்கொள்வதுடன் அவர்கள் உண்மையாக ஏதோ படித்துக்கொண்டார்கள் என்பதாக தராதரப்பத்திரமும் கொடுக்கின்றன.

[illegible] வர்த்தகக் கல்விநிறுவனங்களும், மாணவர்களிடம் அடிப்படை ஆங்கில அறிவு இருக்கிறதா வர்த்தகக் கல்வியை விளங்கிக்கொள்ள, என்ற ஆராயாது சேர்த்துக்கொள்வதும், கவலை தரும் விடயம்.

கையாளக் கூடியளவிற்கு அதிகமாகவே மாணவர்களைச் சேர்த்துக்கொள்வதும் கற்பிக்கும் தரம் பாதிக்கப்படுவதற்கு காரணமாகும். மாணவர்கள் அதிகமாக வந்து சேரும்போது மேலதிக ஆசிரியர்களை வேலைக்கமர்த்த வேண்டியுள்ளது. — அகப்பட்ட யாரையும் எடுத்துக்கொள்வார்கள்.

மாணவர்களைச் சேர்த்துக் கொடுப்பது அவரவர் நாட்டிலிருக்கும் முகவர்களின் பொறுப்பு. இந்த முகவர்கள், 'கொரிய கலாசார, கல்வி மாற்றுத்திட்ட நிறுவனத்தின் தலைவர்' போன்ற பட்டங்களுடன் வருவார்கள். ஆனல் அத்தலகைய தகைமையுடையோர் மிகக் சிலரே. மாணவர்களுக்கு தவருன தகவல்களைத் தருபவர்கள் இவர்கள்.

என்னுடைய முகவர், என்னை சிட்னி விமானத்தளத்தில் சந்திக்க 100 டொலர் பெற்

□ தமிழில்: வளவன் □

றுக்கொண்டார். ஆனல் அதற்கான கட்டணம் 50 டொலர் தான் என்று, நான் பின்னர் தெரிந்துகொண்டேன் என்ருன், தாய்லாந்து நாட்டு மாணவன் ஒருவன்.

இந்த முகவர்களின் நோக்கம் முற்றிலும் பணம் பெருக்குதலே என்பதற்கு உதாரணமாக, ஒரு முகவர் கல்விநிறுவனம் ஒன்றிற்கு எழுதிய கடிதம் இதோ :

''சியோலில் 30 இற்கதிகமான தனியார் கல்வி நிறுவனங்கள் உள்ளன. இந்தவகையில் எனக்கு இங்கே நல்ல வருவாய் உண்டு. கொமிஷனை எனது சார்பில் 20 % மாக உயர்த்த மறுபரிசீலனை செய்யுங்கள். எங்கள் மாற்று வியாபாரம் செழித்து வளரட்டும்''

வெளிநாட்டு மாணவர் வரையில் அவுஸ்திரேலிய அரசின்போக்கும் பணம் சம்பாதிப்பதுதான். லாபம் தரும் ஆசிய மாணவர் சந்தையில் சுரண்டுதல், ஏனைய வெளிநாட்டு பொருளாதார முயற்கள் போலவே, ஒரு ஒஸ்ரேட் (Austrade—Australian Trade Commission) நடவடிக்கையாக்கப்பட்டுள்ளது.

வெளிநாட்டு மாணவரின் கல்வித்துறைக் கட்டணம் மட்டும், 120 மில்லியன் (அவுஸ்திரேலிய) டொலர். இந்தச் சந்தையைப் பாதுகாக்க, தனியார் கல்லூரிகளுக்கான ஒழுக்க நிபந்தனைகள், சமீபத்தில் அரசினல் உருவாக்கப்பட்டன. முன்னர் தனியார் கல்வி நிறுவனங்களில் கைவைக்க மறுத்த ரொனி மெதரேல் இப்பொழுது சுதந்திரமான சந்தை நிலையையும், அதிகார ஊடுருவலையும், 120 மில்லியன் டொலர் வருடாந்த வருமானத்தையும்பற்றி சிந்திக்கிருர்; பெறப்படும் பணத்திற்கு உரிய பெறுமதியுள்ள கல்வியை, பெருகிவரும் மாணவருக்கு வழங்கும் போட்டி நாடுகள் பற்றியும், சிந்திக்கிருர்.

நன்றி : தேட் வேர்ல்ட்
நெற்வேர்க் ஃவீச்சர்ஸ் □

## பற்களும் கற்களும்

நாம் உண்ணும் உணவை கிழித்தும் அரைத்தும் எளிமையாக்கி விழுங்கப் பற்கள் உதவி செய்கின்றன. இதனுல் இரைப்பையில் உணவு மேலும் நன்ருக அரைக்கப்படல் இலகுவாக்கப்படுகிறது.

பற்களே இல்லாத பறவைகளில் கடினமான தானியங்கள், இறைச்சிகள் என்பன அரைக்கப்படுதல் சிரமமல்லவா ? இதைத்தவிர்க்கவே பறவைகள் சிறு கற்களை உள்ளெடுக்கின்றன.

இந்தக்கற்கள் இரைப்பைக்குள் இருப்பதால் இரைப்பை சுருங்கும் வேளையில் கடினமான உணவுகளை அரைக்கின்றது. இதனுல் சமிபாடு இலேசாகின்றது.

திமிங்கிலம், கடல்நாய், நீர்யானை போன்றவற்றிலும் கற்கள் இருப்பது அவதானிக்கப்பட்டுள்ளது.

சில கடல் விலங்குகளில் கொழுப்பு சேருவதனுல் மிதக்கும் தன்மை அதிகரிக்கின்றது; நீரினடியில் மூழ்கி செல்வது கடினம். கற்களை விழுங்குவதால் இலகுவாக நீருக்குள் மூழ்கியபடி நீந்தித்திரியுமாம்.

## பெரிய பூ

சுமத்திராவில் காணப்படும் இரவிசினியா அர்தோல்டி என்னும் தாவரத்தின் பூ மூன்று அடி குறுக்களவு உள்ளது [illegible] சகிக்க முடியாது இருக்குமாம்.

— ரகுவரன்




# பெண்களின் சட்டரீதியான உரிமைகள்

மனிதகுலத்திற்கு ஆண், பெண் பாகுபாடின்றி உரிமைகள் பொதுவானவை. இதனை எந்த அரசாங்கமோ நிறுவனமோ பறிக்க முடியாது. ஆனால் இவ்வுரிமைகள் மீது பாரபட்சம் காட்டப்படும் போதோ அன்றி இவை மீறப்படும்போதோ சட்ட மூலமாக பாதுகாக்கப்படல் வேண்டும். இன்னும் மிக அண்மைக்காலங்களில் ஏற்பட்டுள்ள சமூக, பொருளாதார மாற்றங்கள் காரணமாக இலங்கை மட்டுமன்றி, உலக நாடுகள் பலவற்றிலும் தொழில் பார்க்கும் பெண்களது எண்ணிக்கை அதிகரித்து வருகின்றது. உலகநாடுகளில் தொழில் பார்க்கும் பெண்களது மொத்த எண்ணிக்கை 815 மில்லியனுகவுள்ளது. 1975 - 1985 இடைப்பட்ட காலப்பகுதியில் மட்டும் ஒவ்வொரு வருடமும் 15 மில்லியன் பெண்கள் என்றவாறு தொழில் பார்க்கும் வேலை சக்தியுடன் சேர்ந்துள்ளார்கள். இன்றைய சூழலில் பெண்கள் தொழில் பார்க்க வேண்டியதன் அவசியம் அதிகரித்து வருவதினால் இவர்கள் தொழில் வாய்ப்புகளை நாடுவதில் அதிகமாக ஈடுபடுவது கவனிக்கத்தக்கது. இதுவரை ஆண்கள் ஆதிக்கம் செலுத்தி வந்த சில துறைகளிலும் பெண்கள் இன்று காலெடுத்து வைத்துள்ளனர். மிகத் திறமையான தொழில் நுட்பத்துறைகள், நிர்வாகத் துறைகள், தீர்மானங்கள் எடுத்தல் போன்றனவற்றில் பெண்கள் ஈடுபடுவது அதிகரித்துள்ளது. ஆயினும் ஆண்களுக்கும் பெண்களுக்கும் இடையிலான தொழில்ரீதியான சமத்துவத்தினை வளர்ப்பதற்கு அதிக முயற்சிகள் எடுக்கப்பட்டு வந்த போதிலும் இன்றும் அடிப்படையில் இவற்றை செயற்படுத்துவதில் பாரிய இடைவெளி காணப்படுகின்றது. பெரும்பாலான சட்டரீதியிலமைந்த கொள்கை அணுகுமுறைகள் இன்னும் பெண் தொழிலாளர்களை ஓர் சிறுபான்மையினராகவே கருதுகின்றது. பெண்களது உரிமைகள் தொடர்பான விழிப்புணர்வு அதிகரித்து வருகின்ற போதிலும், இன்னும் பல சமூக பொருளாதார தடைகள் காணப்படுகின்றன.

பெண்களின் உரிமைகளைப் பாதுகாக்கும் முகமாக பல சட்டங்கள் இயற்றப்பட்டிருப்பினும் அவற்றில் சில உரிமைகள் இன்னும் நடை முறைப்படுத்தப் படவில்லை. அதுமட்டுமன்றி வேறும்பல உரிமைகள் சட்டமாக்கப்பட வேண்டியதன் அவசியமும் உள்ளது. ஆகவே இன்று இலங்கையில் சட்டத்தினால் வழங்கப்பட்டுள்ள பெண்களது உரிமைகள் சிலவற்றை இங்கு ஆராய்வோம். இலங்கையில் அரசியல் யாப்பு விதி 12 (2) 'பால் அடிப்படையில் எந்தவித பாரபட்சமும் காட்டப்படல் ஆகாது' எனக் குறிப்பிடுகின்றதெனினும் நடைமுறையில், எமது பெண்களுக்கு கூட்டுத்தாபன சேவைகளில் அல்லது அரச சேவைகளில் உயர்பதவி வழங்குவது குறைவாகவே உள்ளது. அடுத்து, பெண்கள் இளைஞர் சிறுவர்கட்கான சட்டம் 47, 1956 இன் கீழ் 18 வயதிற்கு குறைந்த ஆணொருவரையும், பெண்கள் எவரையும் ஒரு கைத்தொழில் நிறுவனத்தில் இரவு வேளையில் ஈடுபடுத்துவது ஒரு குற்றமாக கணிக்கப்பட்டு, அதற்குரிய தண்டனையும் விதிக்கப்பட்டது. ஆனால் இக்கட்டுப்பாடு 1984, 32 ஆம்இலக்கதிருத்த சட்டம் மூலம் நீக்கப்பட்டு விட்டது. இரவு வேளையில் பெண்களைத் தொழிலில் ஈடுபடுத்துவது பின்வரும் விதிக்கமைய இருக்க வேண்டும்.

1. ஒரு பெண்ணின் விருப்பத்திற்கு எதிராக அவர் இரவு நேர வேளையில் ஈடுபடுத்தப் படக் கூடாது.

2. இரவு 10 மணிக்குப்பின் ஒரு பெண்ணை வேலையில் ஈடுபடுத்த முன் தொழில் ஆணையாளரிடமிருந்து எழுத்திலான உத்தரவைப் பெற வேண்டும்.

3. காலை 6 மணிக்கு மாலை 6 மணிக்கும் இடையில் வேலையில் ஈடுபடுத்தப்பட்ட பெண்ணொருவர் இரவு 10 மணிக்கு பின்னர் வேலையில் ஈடுபடுத்தக் கூடாது.

4. இரவு வேலையில் ஈடுபடுத்தப்படும் பெண் ஒருவரது ஊதியம் அதிகமானதாக இருக்க வேண்டும்.

5. இரவு நேரத்தில் வேலையில் ஈடுபடுத்தப்பட்ட பெண்களின் நலனைக் கவனிப்பதற்காகப் பெண் மேற்பார்வையாளர் அமர்த்தப்பட வேண்டும்.

6. பெண் தொழிலாளர்கட்கு இளைப்பாறும் அறை, சிற்றுண்டி வசதிகள் செய்து கொடுக்கப்பட வேண்டும்.

7. எந்த ஒரு பெண் தொழிலாளியும் ஒரு மாதத்தில் 10 நாட்களுக்கு அதிகமாக இரவு வேலையிலீடுபடுத்துதல் தடை செய்யப்பட்டுள்ளது.

ஆனால் தற்போது சுதந்திர வர்த்தக வலயத்தில்–வெளிநாட்டவர்களின் முதலீட்டினால் நடத்தப்படும் தொழில் நிறுவனங்களில் பெண் தொழிலாளர்கள் அதிகமாக ஈடுபடுத்தப்பட்டிருந்த போதிலும், இவ்விதிகளை அவர்கள் இறுக்கமாக கடைப்பிடிப்பதாகத் தெரியவில்லை.

பெண்களிற்குரிய மகப்பேறு கால சலுகைகள்-உரிமைகள் என்பன மகப்பேறு சபைச் சட்டமூலம் வழங்கப்பட்டுள்ளது. இதன் படி;

1. தொழில் வழங்கும் எவரும் பிரசவ நாளிலிருந்து 4 கிழமைக்குள், பிரசவதாயைத் தெரிந்து கொண்டும் சேவையில் ஈடுபடுத்தக்கூடாது.

2. முதல் அல்லது இரண்டாவது குழந்தைக்கான மகப்பேறு கால லீவு 12 கிழமையாகும். பிள்ளைப்பேறு நாளிற்கு முன் 2 கிழமையும் பிள்ளைப் பேற்றுக்குப் பின் 10 கிழமையும் எனப் பிரித்து, லீவு வழங்கப்பட வேண்டும்.

3. மூன்றாவது மகப் பேற்றிற்கும் அதன் பின்னரும் 6 கிழமை லீவு வழங்கப்பட வேண்டும்.

4. சேவை காலத்தில் மகப்பேறு கால சலுகைகளைப் பெறுவதற்கு ஒரு பெண் தொழிலாளி, அத்தருணத்தில் அவளுக்கு தொழில் வழங்குபவரிடம் குறைந்தது 150 நாட்கள், கடந்த காலத்தில் தொழில் செய்திருக்க வேண்டும்.

**திருமதி**
**சரோஜா சிவச்சந்திரன்**

5. ஒரு பெண் தொழிலாளி பிள்ளைப் பேற்றிற்கு முன் ஒரு மாத கால அறிவித்தலும் பிள்ளைப் பேற்றின் பின்னர் ஒரு கிழமை அறிவித்தலும் தொழில் வழங்குவோருக்குக் கொடுக்க வேண்டும்.

6. கடை அலுவலக ஊழியர் சட்டத்தின்படி பெண் தொழிலாளர் மகப்பேற்றுக் காலச் சலுகைக்கு உரித்துடையவராவர்.

7. மகப்பேற்றுக் கால லீவின் போது பெண் தொழிலாளி பூரண ஊதியம்பெற உரிமை உடையவர்.

8. மகப்பேற்றின் முன்னரும் பின்னரும் தாய்க்கோ அன்றி சேய்க்கோ கெடுதி விளைவிக்குமுகமாக தாயை வேலையிலீடுபடுத்தக் கூடாது.

9. ஒரு பெண் தொழிலாளி கர்ப்பமுற்றிருக்கும் காரணத்தினால் அவளை வேலையிலிருந்து நீக்கக் கூடாது.

10. பெண் தொழிலாளர்கட்கு ஆசன வசதி வழங்கப்பட வேண்டும்.

இலங்கை தண்டனைச் சட்டக்கோவையின் கீழ்ப்பெண்களுக்கு தொல்லை கொடுத்தல், உடற்காயம் உண்டாகுதல் போன்ற செய்கைகள் குற்றமாக விபரிக்கப்பட்டு பெண்களுக்குப் பாதுகாப்பு அளிக்கப்பட்டுள்ளது.

1. ஒரு பெண்ணின் விருப்பத்திற் கெதிராகவோ அல்லது அப்பெண்ணின் சம்மதமின்றியோ அல்லது பலாத்காரமாக சம்மதம் பெற்றோ ஒரு ஆண் உடலுறவு கொள்வது, கற்பழிப்பு என்ற குற்றமாகும்.

2. 12 வயதிற்குட்பட்ட ஒரு பெண்ணுடன் அவரின் சம்மதத்துடனோ சம்மதமின்றியோ உடலுறவு கொள்ளுதல் கற்பழிப்புக் குற்றமாகும்.

3. ஒரு பெண்ணின் நாணத்தை குலைக்கும் முகமாக தாக்குதலோ அன்றி பலாத்காரம் பிரயோகித்தலோ தண்டனைக்குரிய குற்றமாகும்.

4. ஒரு திருமணமான பெண்ணின் கணவன் தன் மனைவிக்கு உடல் ஊறு விளைவிக்கும் முகமாக தாக்கினால் அவர் குற்றம் புரிந்தவராக கருதப்படுவர்.

5. ஒரு கன்னிப் பெண் ஒரு ஆண் தன்னைத் திருமணம் புரிவார் என்ற வாக்குறுதியை வழங்கியதால் அவருடன் உடலுறவு கொண்டபின், அவ் ஆண் அப் பெண்ணைத் திருமணம் புரிய மறுத்தால், அவ் ஆண் அப்பெண்ணைக் கற்பழித்தார் என, அப் பெண் அந்த ஆணிற்கு எதிராக வழக்குத் தொடரலாம்; அத்துடன் நட்ட ஈடும் கோரலாம்.

6. ஒரு திருமணமான பெண் வருமானம் ஈட்டாதவர் எனின், திருமணம் வலிதாக இருக்கும் காலம் வரை தன் கணவரிடமிருந்து ஜீவனும்சப் பணம் பெறும் உரிமை உடையவர். விவாகரத்துக் கோரும் வேளையில் பெண் வழக்காளியாக அல்லது எதிரியாக இருந்தாலும், வழக்கிற்கான செலவுத் தொகையினையும் வழக்கு நடை பெறும் காலத்திற்கு ஜீவனும்சமும் பெற, உரிமையுடையவராவர்.

7. ஒரு அரச ஊழியரின் விதவை, விதவைகள் அனாதைகட்குரிய நிதியத்திலிருந்து பணம் பெற உரிமையுடையவராவர்.

8. இலங்கையின் பொதுச்சட்டத்தின் கீழ், மரணசாசனமின்றி ஒருவர் இறந்தால் அவரது சொத்துக்களின் அரைப் பங்கை அவரின் விதவையும், மிகுதி அரைப்பங்கை பிள்ளைகளும் பெறுவர். இங்கு பால் வேறுபாடின்றி சொத்து பங்கிடப்படுகின்றது; ஆனால் தேச வழமை, கண்டியசட்டம், முஸ்லிம் சட்டம் வேறுபாடாக உள்ளன.

பெண்கள் தமது சட்டரீதியான உரிமைகள் என்ன என்பதனை ஓரளவாவது அறிந்து கொள்வதற்கு, மேற்படி விளக்கங்கள் உதவுமென நினைக்கிறேன். □


திசை

## 2000 - ரூபா பரிசுச் சிறுகதைப் போட்டி

சிறுகதை இலக்கியத்துறைக்கு வளமூட்டும் நோக்கோடும், சகல எழுத்தாளர்களையும் — இளம் தலைமுறையினர், எழுதாமல் இருக்கும் பழந்தலைமுறையினர் — ஆகிய சகலரையும் ஊக்குவிக்கும் நோக்கோடும் சிறுகதைப் போட்டியொன்றை நடாத்தத் திசை தீர்மானித்துள்ளது.

### பரிசு விபரம்

| | | |
|---|---|---|
| முதற் பரிசு | : | 750/=ரூபா |
| இரண்டாம் பரிசு | ; | 500/=ரூபா |
| மூன்றும் பரிசு | ; | 250/=ரூபா |
| ஆறுதல் பரிசுகள் | : | ஒவ்வொன்றும் 100/=ரூபா வீதம் ஐந்து பரிசுகள் |

### நிபந்தனைகள்

1) சிறுகதைகள் அனைத்தும் எழுதுவோரின் சொந்தப் படைப்புகளாக இருக்கவேண்டும்.
2) இதற்கு முன்னர் வேறு எங்காயினும் வெளியிடப்படாதவையாக இருக்கவேண்டும்.
3) எந்தப் பிரச்சினையையும் மையமாக வைத்து எழுதப்படலாம்.
4) ஒருவர் எத்தனை கதைகளையும் அனுப்பலாம். ஆனல், கதைகள் ஒவ்வொன்றும் முழுத்தாளில் (பூல்ஸ் கப் தாள்) பத்துப் பக்கங்களிற்கு மேற்படாமல், தெளிவான கையெழுத்தில் எழுதப்பட்டிருக்க வேண்டும்
5) எழுத்தாளரின் பெயர், புனைபெயர், முகவரி என்பன தனித் தாளில் எழுதப்பட்டிருக்க வேண்டும்
6) போட்டி முடிவு திகதி 3-5-1989
7) சிறுகதைப் போட்டி, ஆசிரியர் 'திசை', 267 பிரதான வீதி, யாழ்ப்பாணம். என முகவரியிடப்பட்டு, கதைகள் அனுப்பப்படவேண்டும்.
8) திசை ஆசிரியருடன் மேலும் இருவர் கொண்ட நடுவர் குழுவின் முடிவே, இறுதியானது.
9) பரிசுக் கதைகளும், தரமான ஏனைய கதைகளும் திசை யில் தொடர்ந்து வெளியிடப்படும். □

## உளவியல்

# உங்களுக்குள்ளே ஓர் ஓவியக் கலைஞன்

ச. ம. அச்சுதன்

உங்களுக்குத் தெரியுமா ஒரு விஷயம்? உங்கள் மூளைக்குள் ஓர் ஓவியக் கலைஞன் ஒளிந்திருக்கிறனே, அந்த விஷயந்தான், என்ன பைத்தியக்காரச் சிந்தனை என்று கூறுகிறீர்கள்? கொஞ்சம் பொறுங்கள்; கூறுவதைக் கேளுங்கள்.

எமது மூளைக்குள் ஒளிந்திருக்கும் அந்த ஓவியக்கலைஞனின் பெயர் என்ன தெரியுமா? அவன் பெயர்தான் 'கற்பனை' அதாவது நமது மனந்தான் எம்மை ஆக்கவும் அழிக்கவும் வல்லதாக இருக்கிறது. என்பதே இதன் அர்த்தம். இப்போ விஷயம் புரிகிறதா? அப்போ, தொடர்ந்து படியுங்கள்.

இந்த அரூப ஓவியக் கலைஞன் எதிர்காலத்தில் நடக்க விருப்பவைகளைச் சித்திரமாகத் தீட்டுவான். அவைகளில் சில ஆக்கபூர்வமானவையாக —வாழ்க்கையில் வெற்றி, மனஅமைதி, சமாதானம் போன்றவைகளைப் படம் போட்டுக் காட்டி உங்களை ஓர் வெற்றிநோக்குவாதியாக (Optimist) உருவாக்குவன.

வேறு சில சித்திரங்கள் மூலம் சுழிவிரக்கங்களையும், தோல்விகளையும், கவலைகளையும் சித்திரமாகத் தீட்டி உங்களை ஒரு தோல்விநோக்கு வாதியாக (Pessimist) உருக்கொள்ள வைத்தும் விடுவான்.

இவ் ஓவியக் கலைஞன் உங்களின் மிக நெருங்கிய நண்பனாக இருப்பான். அதேசமயம், அவன் உங்களின் மிகவும் விரும்பத்தகாத எதிரியாகவும் இருப்பான்.

நீங்கள் இக்கலைஞனை உங்கள் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருந்தால், அவனை உங்கள் வாழ்க்கையின் வெற்றி வாய்ப்புகளையும் மேம்பாடுகளையும் மகிழ்ச்சியையும் மட்டும் ஓவியங்களாகத் தீட்டும் கலைஞனாக வளர்க்கமுடியும். அதற்கு உரிய வழி என்ன?

நாம் ஒவ்வொருவரும் ஆழ்மனவிருப்புச்சக்தி(Will Power) உடையவர்களே. அந்தச் சக்திமூலம் இந்தக் கலைஞனுக்குப் பலமூட்டக் கூடிய–வாழ்வில் நம்பிக்கையூட்டக்கூடிய– காட்சிகளையே சித்திரமாக வரையுமாறு நாம் ஆணை பிறப்பிக்கவேண்டும். அதன் மூலம் நாம் ஒரு வெற்றி நோக்கு வாதியாக உருவெடுக்க முடியும்.

இத்தகைய சித்திரங்கள் இரு வகைப்படும். ஒன்று கற்பனைக் காட்சி (Visual Imagery). அடுத்தது மனனம் செய்யப்பட்ட மன அமைதி (Memorised Peacefulness) என்பதாகும்.

உங்கள் அலுவலகத்தில் அல்லது நீங்கள் செய்யும் வேலையில் ஒரு சிக்கல் ஏற்பட்டுவிடுகிறது. அதை எப்படித் தீர்ப்பது என்று உங்களுக்குள் ஒரு கலக்கம். என்ன செய்வீர்கள்? நாடியில் கை வைத்துக் கொண்டு உட்கார்ந்திருக்கப் போகிறீர்களா? கூடாது!

இச்சந்தர்ப்பத்தில்தான் நீங்கள் உங்கள் ஆழ்மனவிருப்புச் சக்திக்கு வேலை கொடுக்க வேண்டும்.

உங்கள் ஆழ்மனவிருப்புச் சக்தியைப் பயன்படுத்தி உங்களுக்குள் ஒளிந்திருக்கும் அந்த ஓவியனைச் சற்று உசுப்பிவிடுங்கள். அவன், நீங்கள் அந்தச் சிக்கலை எப்படித் தீர்க்கவேண்டும், சிக்கல் தீர்ந்தபின் நீங்கள் எப்படி உற்சாகமாகச் செயலாற்றுவீர்கள், எந்த வகையில் உயர்வடைவீர்கள் என்பதை மிகத் துல்லியமாக அழகிய ஓவியங்களாகத் தீட்டித்தருவான். பிறகென்ன? உங்கள் அடிமனம் (Sub Conscious Mind) விழித்துக் கொள்ள உங்கள் மனோசக்தியும் வேலை செய்யத் தொடங்கிவிடும். மனோசக்தி வேலை செய்ய ஆரம்பித்தால் உடலில் செயலாற்றும் திறன் தானாக ஏற்படும். இந்த அடிமனம் சீராக இயங்கினால் எம்முன் எந்தச் சிக்கலும் வாலாட்ட முடியாது. இதுதான், கற்பனைக் காட்சியின் துணைக்கொண்டு வாழ்வில் வெற்றி பெறுவதென்பது. நீங்கள் எப்படி வாழ்வில் வெற்றி பெற வேண்டும் என்பதை அந்த ஓவியக்கலைஞன் தனது கற்பனைச் சித்திரங்கள் மூலம் உங்களுக்கு உணர்த்தி உங்களை உற்சாகமூட்டி உயர்வடையச் செய்வான்.

அடுத்து மனனம் செய்யப்பட்ட மன அமைதியைப் பற்றிப் பார்ப்போமே! உங்கள் குடும்பத்தில் ஒரு துக்ககரமான சம்பவம் நிகழ்ந்து விட்டது. அல்லது ஓர் இழப்பு ஏற்பட்டுவிட்டது. உங்கள் மனம் அமைதியின்றி அல்லாடிக் கொண்டிருக்கிறது. வெளியே சென்று சற்று உங்களை ஆசுவாசப்படுத்திக்கொள்ளும் சூழ்நிலையும் இல்லை. வீட்டில் உள்ளவர்களுடனும் கவலையைப் பகிர்ந்து கொள்ள முடியாத நிலை. வீட்டில் இருந்தபடியே மனதை அமைதிப்படுத்திக் கொண்டால் நல்லாயிருக்கும். அது எப்படிச் சாத்தியமாகும்?

நீங்கள் வெளியூருக்குச் சென்றிருந்தபோது ஒருசில மனதுக்கினிய சம்பவங்கள் உங்களுக்கு ஏற்பட்டிருக்கும். இரம்மியமான இயற்கைச் சூழ்நிலையில் நீங்கள் லயித்தும் இருக்கலாம். இத்தகைய காட்சிகளையும் சம்பவங்களையும் நீங்கள் உங்கள் மனத்திரையில் இடையிடையே ஓட்டிப் பார்க்கவேண்டும். அப்படிப் பழக்கப் படுத்திக்கொண்டால் அவை உங்கள் அடிமனத்தில் பதிவாகிவிடும். நீங்கள் சோர்வுற்று இருக்கும் போது இப் பதிவுகளை உங்கள் ஓவியக்கலைஞன் கவினுறு ஓவியங்களாகத் தீட்டி உங்களுக்கு ஓர் உற்சாகத்தையும் மன அமைதியையும் உருவாக்குகிறான். இது சாத்தியமானதா? இது சாத்தியமாக நீங்கள் செய்ய வேண்டியது என்ன?

சாய்வுநாற்காலியில் வசதியாக உட்கார்ந்து கொள்ளுங்கள். கண்களை மூடிக்கொள்ளுங்கள். இப்போ 'கற்பனை' என்னும் இந்த ஓவியக் கலைஞனை அழையுங்கள். நீங்கள் முன்னர் ஒரு முறை சென்று வந்த—உங்கள் மனதைக் கவர்ந்த-இடையிடையே நீங்கள் நினைத்துக் கொள்ளும் ஒரு இரம்மியமான இடத்தை நினைவுக்குக் கொண்டுவாருங்கள்.

அக்காட்சியை உங்கள் ஓவியக் கலைஞன் தத்ரூபமாக வர்ணஜாலங்களுடன் வரைந்து தருவான். அதில் நீங்கள், ஒரு மஞ்சள் வெயில் மாலைப் பொழுதில், இதமான இளங் காற்றில் தென்னோலைகள் மெல்லிய ஓசை எழுப்ப, கடற்கரை மணலில் அக்கடா என்று அமர்ந்திருக்கிறீர்கள்.

இளம் பெண்கள், தலைமயிரும் சேலைத்தலைப்பும் காற்றில் நீந்தி விளையாட நடந்து செல்கிறார்கள். சின்னஞ்சிறுசுகள் மணலில் மணல்வீடு கட்டி விளையாடுகிறார்கள். வயோதிபர் சிலர், ஓரமாக அமர்ந்து பழைய நினைவுகளை அசைபோட்டுக்கொண்டு இருக்கிறார்கள். கடலில் சற்றுத் தொலைவில் சில கப்பல்கள் மிதந்து கொண்டிருக்கின்றன. கப்பல்களுக்கு மேலாக சில பறவைகள் மெதுவான இயக்கத்தில் சிறகடித்துப் பறந்து கொண்டிருக்கின்றன. இப்படி அந்தக் கடற்கரையில் எத்தனையோ காட்சிகளை உங்கள் மனக்கண் முன் வரைந்து காட்டுவான் அந்தக் கற்பனை எனும் ஓவியக் கலைஞன். நீங்களும் அப்போதைய இக்கட்டான சூழ்நிலையை மறந்து அதில் லயித்து விடுவீர்கள். உங்களை அறியாமலே உங்கள் மனம் அமைதிபெறுகிறது. இழந்த உற்சாகம் புதுப்பிக்கப்பட்டுவிடுகிறது. கண் விழிக்கும்போது நீங்கள் ஒரு புதுமனிதனைக் கட்டாயம் காட்சியளிப்பீர்கள்; சந்தேகமேயில்லை.

மனதுக்கு இதமான இன்னொரு சித்திரத்தையும் பார்ப்போமா?

கந்தசாமிக்கும் அவனின் மனைவிக்கும் ஒரு சிறு மனப்பூசல். ஆயினும் பிள்ளைகளைப் பாதிக்காதவாறு அவர்களின் அன்றாட கருமங்கள் நடைபெறுகின்றன. பிள்ளைகளுக்கு அவர்களின் உட்பூசல் தெரியாதவாறு இருவரும் நடமாடுகிறார்கள். ஆனால் அவர்களுக்கிடையே இரண்டொரு நாட்களாக சுமுகமான உறவில்லை; பேச்சுவார்த்தையுமில்லை. பூசலுக்குக் காரணமோ மிகமிக அற்பமானது. யார் முதல் பேசுவது என்பதே இப்போ பிரச்சினை. இதை நீடிக்க விடுவதா? கூடாது! சரி, கந்தசாமி இப்போ என்னதான் செய்யப் போகிறான்?

அன்றிரவு கந்தசாமி கண்மூடிப் படுக்கையில் படுத்திருக்கிறான். அவனது மனைவி அவனுக்கு முதுகைக் காட்டியவாறு ஒதுங்கிப் படுத்திருக்கிறாள். இப்போ கந்தசாமி செய்யவேண்டியதெல்லாம் இதுதான். அவன் தன் ஆழ்மனவிருப்புச் சக்தி மூலம் அந்தக் 'கற்பனை' ஓவியக் கலைஞனுடன் தொடர்பு கொள்ள வேண்டும். அந்த ஓவியக்கலைஞன் கந்தசாமியின் திருமணமான ஆரம்பநாட்களில் நிகழ்ந்த இனிய சம்பவங்களை அவனின் மனக்கண்முன் அழகிய சித்திரங்களாகத் தீட்டுவான். அத்துடன் அவன் மனைவி இதுகாலவரை அவனுக்காகவும் பிள்ளைகளுக்காகவும் செய்த தன்னலமற்ற சேவைகளையும் கந்தசாமிக்கு கலை நயத்துடன் எடுத்துக் காட்டுவான். அதன் பின்னரும் கந்தசாமியால் தன்னில் இனிய பாதியை விட்டு விலகி இருக்கமுடியுமா, என்ன? ஒன்றும் நடவாதது போல் தானே சென்று அவளுடன் கதைக்கிறான். இதில் கந்தசாமி, தான் தோற்று விட்டதாகக் கருதவேயில்லை. ஏனெனில் இல்லறத்தில் ஏற்படும் பூசலில் தோற்றவர்களே வென்றவர்களாவார்கள்.

இந்த உண்மையை இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே

''ஊடலில் தோற்றவர் வென்றார் அதுமன்னும்
கூடலில் காணப்படும்''

என்னும் குறள் மூலம் வெகு அழகாகக் கூறியிருக்கிறான் அந்தப் பொய்யாமொழிப் புலவன்.

பரீட்சித்துத்தான் பாருங்களேன்! □

# எவருமே பணக்காரனுமல்ல ஏழையுமல்ல

எஸ். பி. கே.

சீன கொம்யூன்களின் நுழைவாயிலில் 'சேர்ந்து செல்வந்தராகுங்கள்' என்ற அறிவிப்புத் தொங்கும். இத்தகைய சோசலிச சுலோகங்கள் சீனாவின் ஏனைய பிரதேசங்களில் எப்போதோ, பழைய வாக்கியங்களாகி விட்டன. அங்கெல்லாம் டெங் சியாவோபிங் தலைமை—முதலாளித்துவ பொருளாதார மாற்றங்கள் ரீதியில்—விவசாயிகளை 'முதலில் செல்வந்தராகுங்கள்' என ஊக்குவிக்கின்றது. ஆனால் யுவான்ஜியா என்ற சிறு கிராமம், மாவோவின் சிந்தனைகளை இறுகப் பற்றியிருக்கும் கொம்யூன். 'எவருமே பணக்காரனுமல்ல, ஏழையுமல்ல' என்று இக்கிராமத்தின் கொம்யூனிஸ்ற் கட்சிபிரதிச்செயலாளர் சியாம் வெங்ஜி கூறுகிறார். இவர் மாவோவின் கொள்கைகளை மனதாரப் பின்பற்றுபவர். மாவோ கூற்றுப்படி வெள்ளை சேட்டும் பருத்திநூல் களிசானும் அணிகிறார். 'நான் மற்றவர் சொல்வதைப் பற்றி கவலைப்படுவதில்லை. நாங்கள் சமத்துவத்தை நம்புகிறோம். என்பது இவரது அஞ்சாமை, தாய்மையைப் புலப்படுத்துகின்றது.

சமத்துவத்தை நியாயப்படுத்துவது டெங்கின் கொள்கையைத் தாக்குவதற்குச் சமமாகும். பிரதேச அலுவலர்கள் மாவோவின் கோட்பாடுகளைப் புறக்கணிக்கும்படி யுவான்ஜியா தலைவர்களை வற்புறுத்துவார்கள். ஆனால் குழுமமாக வாழ்தலைப் புறந்தள்ளிவிட, சட்ட நிபந்தனை எதுவுமில்லை. அக்கிராமத்தின் 220 விவசாயிகளும் கொள்கை வழுவாது வாழ்கிறார்கள். கொம்யூனின் வளர்ச்சியுடன் விவாதிப்பது கடினமான காரியம். ஒவ்வொரு யுவான்ஜியா குடும்பமும், இறக்குமதி செய்யப்பட்ட கலர் ரெலிவிஷன் வைத்திருக்கிறது. அரைவாசிக்கு மேல் குளிர்சாதனப் பெட்டி, சலவை யந்திரம், தொலைபேசி வைத்திருக்கிறார்கள். மாடிவீடுகளில் வசிக்கிறார்கள் ஒவ்வொருவரும் 89 டொலருக்குச் சமமான மாத வருமானம் பெறுகிறார்கள். (தேசிய விவசாயிகளின்வருமானத்தின் ஒன்பது மடங்கு அதிகம்) அத்துடன் போனஸ், இலாபத்தில் பங்கு போன்ற மேலதி வருவாய்களைப் பெற்று மகிழ்கிறார்கள்.

யுவான்ஜியாவின் தானிய உற்பத்தி, தேசிய உற்பத்தி விகிதத்தை விட உயர்ந்தது. அந்த மட்டம் குறையவில்லை; அதே வேளை தேசிய விகிதம் வீழ்ச்சியடைந்தது. கொம்யூன் தலைவர்கள் சிமெந்து ஆலை ஒன்றையும், போக்குவரத்து நிறுவனம் ஒன்றையும், விளைபொருட்களை வாங்கும் வர்த்தக நிலையம் ஒன்றையும் நிறுவியுள்ளார்கள். அயலூர்களிலிருக்கும் கன்னியர் கொம்யூன் இற்றுள் கலியாணம் செய்து கொள்ள விரும்புகிறார்கள். கொம்யூன் இல் வாழும் ஆண்கள், அப்பெண்கள் உயர்கல்வி பெற்றவர்கள் என்பதால் அவர்களை மணமுடிக்க விரும்புகிறார்கள். எங்களைப் புரிந்து கொள்ளாதவர்களே எம்மைக் குறைசொல்லுகிறார்கள் என்று கூறும் கொம்யூனின் கட்சிச் செயலாளர் ஜியோ யூலு, எங்கள் தேவைக்கேற்ப நாங்கள் முன்னேறி வந்துள்ளோம் என்கிறார். முடிவாக. சீனப் பத்தி

(9-ஆம் பக்கம் பார்க்க)

# கடபதக சாயா

கொ. றெ. கொன்ஸ்ரன்ரைன்

பிரான்சில் சினிமா பற்றிப் படித்தவரான வசந்த ஒபயசேகர, சமகாலச் சிங்களத் திரை உலகின் மிக முக்கியமான இயக்குநர்களில் ஒருவர். வல்மத் வூவோ, பலங்கற்றியோ, தடயம ஆகிய அவரது படங்கள் ஏற்கனவே முக்கியத்துவம் பெற்றுள்ளன; கடபதக சாயா தற்போது தென்னிலங்கையில் திரையிடப்பட்டுள்ளது. அமெரிக்காவில் வசித்துவரும், புகழ்பெற்ற சமூக - மானிடவியற் பேராசிரியர் கணநாத் ஒபேசேகரவின் சகோதரர்தான் 'வசந்த' என்பதும், குறிப்பிடத்தக்கது.

சிங்களத் திரைப்பட ஆர்வலர்கள் மத்தியில் பரபரப்பாகப் பேசப்பட்டும், விமர்சிக்கப்பட்டும் வரும் ஒரு திரைப்படம் கடபதக சாயா (கண்ணாடியில் பிம்பங்கள்). சிங்கள சினிமாத்துறையின் வளர்ச்சிக்கு ஓர் எடுத்துக்காட்டாகவும், வசந்த ஒபயசேகரவின் அறிவுத்திறனின் வெளிப்பாடாகவும் இந்தத் திரைப்படம் திகழ்கிறது.

அடிப்படையில் இது ஒரு வித்தியாசமான திரைப்படம். ஒரு பிரதான கதையோட்டத்துடன் இணைந்தவாறு, சமூக நிகழ்வுகளையும் பரிமாணங்களையும் ஒரு புதிய அணுகுமுறையினூடாக வெளிக்கொணர முயற்சித்துள்ளார், வசந்த ஒபயசேகர.

தனரத்ன (விஜய குமாரணதுங்க) ஒரு வியாபாரி. நந்தாவதி (சுவர்ணா மல்லவாராச்சி) தனரத்னவின் மனைவியின் தங்கை. சிறுவயதிலேயே தாய் தந்தையரை இழந்த காரணத்தினால் நந்தா, தனரத்னவின் குடும்பத்தில் தங்கி வளர்ந்து வருகிறாள்.

நந்தா பாடசாலைக்காலங்களில் பியதிலக (சனத் குணதிலக) என்ற இராணுவ வீரனைக் காதலிக்கிறாள். ஆனால் துரதிர்ஷ்டவசமாக நந்தா, தனரத்னவினால் கற்பழிக்கப்படுகிறாள். ஆயினும் இது மறைக்கப்பட்டு பியதிலக—நந்தா திருமணம் நடைபெறுகிறது. நந்தா தனரத்னவுடனான தனது உறவைப் பயன்படுத்தி, அவனிடமிருந்து தொடர்ந்து உதவிகளைப் பெற்று வருகிறாள். பியதிலக இராணுவத்தை விட்டு சொந்தத்தில் தொழில் நடாத்தவும் உதவுகிறான், தனரத்ன. இது நந்தாவின் அக்காவான விமலாவதிக்கு (சுனித்ரா சரச்சந்திர) தெரியவரவே ஆத்திரமடையுமவள், பியதிலகவிடம் இத்தொடர்பைப்பற்றிக் கூறிவிடுகிறாள். இதனைக் கேட்டு வெகுண்டெழும் பியதிலக தனரத்னவினால் தாக்கப்படுகிறான். அத்துடன் நில்லாது தான் பெற்றுக்கொடுத்த கடையையும் திரும்ப எடுத்துவிடுகிறான். இவற்றினால் பாதிக்கப்பட்ட நந்தா தனரத்னவை அசிட் வீசி கொலை செய்கிறாள்.

இவற்றின் விளைவாக பியதிலகவில் சுயமுன்னேற்றத்திற்கான ஓர் உந்தல் பிறக்கிறது. தனரத்னவையும் தான் விஞ்ச வேண்டும் என்ற அவாவினால், அவன் தயவு தாட்சண்யமற்ற முதலாளியாகிறான், நந்தாவோ தனது குடும்பம், பிள்ளைகளைப் பற்றி பெரிய எதிர்பார்ப்புகளுடன் வாழ்ந்து வரும் வேளை, பிள்ளைகள் இன்றைய இளம் சந்ததியினரின் ''நாகரிக'' கலாசாரத்துள் அமிழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.

படத்தின் ஆரம்பத்திலேயே தனரத்ன இறந்துவிட்டான். பொலிஸ் விசாரணை பின்னணி ஒலியில் நடக்க எழுத்தோட்டம் தொடங்குகிறது. தொடர்ந்து நந்தாவின் திருமண வைபவமும் தனரத்னவின் மரணச்சடங்கும் கலந்து காட்டப்படுகின்றன. இருசடங்குகளிலுமிருக்கும் சம்பிரதாயங்களும் ஒத்து நோக்கப்படுகின்றன. இந்த ஆரம்ப கட்டத்தில் காட்சிப் படிமங்களுக்கூடாகவே கதை கொண்டு செல்லப்படுகிறது. பின்னணியில் (ஒலி) பொலிஸ் விசாரணை தொடர்கிறது. ஆரம்பக்கட்டங்களிலேயே ஒலியும், ஒளியும் இருவேறுபட்ட தளங்களில் செல்வதை அவதானிக்கும் பார்வையாளன், சிந்தனையின் உதவியுடன் இரண்டையும் இணைத்து விளங்கிக் கொள்ள வேண்டிய நிலைக்குத் தள்ளப்படுகிறான்.

பொலிஸ் விசாரணையுடன், நேரடியாகவும் மறைமுகமாகவும் சம்பந்தப்பட்ட காட்சிகள் இணைக்கப்பட்டு கதை சொல்லப்படுகிறது. உதாரணமாக "திருமணத்தின் பின்னும் தொடர்பு இருந்ததா'' எனப் பொலிசார் கேட்கிறார்கள். நந்தா ''இல்லை'' எனக்கூறுகிறாள். ஆனால் திருமணத்தின் பின் தனரத்ன நந்தாவின் வீட்டில் அவளுடன் கதைத்துக் கொண்டிருப்பது திரையில் காட்டப்படுகிறது. இப்படியாகசம்பவங்கள் பிளாஷ் பாக்கில் இல்லாமல் கலவையாக சேர்க்கப்பட்டுள்ளன.

வெறுக்கத்தக்க ஒரு முதலாளித்துவ சமுதாயத்தின் பிரதிநிதியாக தனரத்ன காட்டப்பட்டுள்ளான். விமலாவதி உணர்வுகளை மறைக்கும்—எதிர்பார்ப்புகளை மறந்து வாழும்—ஒரு பெண்ணாகக் காட்டப்பட்டுள்ளாள். இதைத் தொடர்ந்து வரும் நந்தா, உணர்வுகளையும் எதிர்பார்ப்புகளையும் அப்பட்டமாக வெளிக்காட்டுகிறாள். அடுத்த சந்ததியில் வரும் நந்தாவின் மகள், இன்னமும் சுதந்திரமான ஒரு வாழ்முறையைக் காட்டுகிறாள். இதன் மூலம் பெண்ணிலைவாதமும் தொடப்பட்டுள்ளது. இராணுவவாழ்வின் இடர்பாடுகள் பியதிலகவின் ஆரம்பவாழ்வில் காட்டப்படுகிறது, படத்தின் இறுதிக் கட்டத்தில், தற்கால இளம் சந்ததியினரில் ஏற்பட்டுவரும் பாரிய பண்பாட்டு வேறுபாடுகள் காட்டப்பட்டுள்ளன. இப்படி பல்வேறு பிரச்சினைகள் பிரதிபலிக்கப்பட்டிருந்தாலும், ஒன்று மற்றையதை மறைத்து விடாதவாறு நுணுக்கமாக நெறிப்படுத்தப்பட்டுள்ளது,

காட்சிப்படிமங்கள், ஒலி, ஒளி என்பனவும் குறிப்பிடக்கூடிய விதத்தில் கையாளப்பட்டுள்ளன. உதாரணமாகக் கூறுவதானால், நந்தாவும் பியதிலகவும் திருமணத்தின் பின் தனித்துச் செல்கிறார்கள். நந்தா குளித்துக் கொண்டிருக்கிறாள்; பியதிலக மூடப்பட்ட குளியலறைக்கு வெளியே நின்று கொண்டிருக்கிறான். திடீரென பலத்த மழை பெய்கிறது. இது குறியீடாக மாறி நந்தாவுக்கு, தான் தனரத்னவினால் கற்பழிக்கப்பட்ட நிகழ்ச்சியை நினைவுபடுத்துகிறது. ஆனால் பியதிலக, அதே மழையைப் பார்த்து ரசித்துக்கொண்டிருக்கிறான். இதுவும் இதனைத் தொடர்ந்து வரும் சில காட்சிகளும், இவர்களின் அகங்களுக்கிடையிலிருக்கும் பாரிய இடைவெளியினையும், எதிர்கால தாம்பத்திய வாழ்வில் ஏற்படக் கூடிய சிக்கல்களையும் துல்லியமாக விளக்கி நிற்கின்றன.

மொத்தமாக பின்னணி இசை இல்லாவிட்டாலும், விரல் விட்டு எண்ணக்கூடிய சந்தர்ப்பங்களில் எளிமையாக இசைக்கருவிகள் பாவிக்கப்பட்டுள்ளன. (முக்கியமாக மேள ஒலி); இதுவும் ஒரு கருத்தை வெளிப்படுத்தவே பயன்பட்டுள்ளது.

கடைசிக்கட்டம் ஒலி, ஒளி உதவியுடன் பார்வையாளனை ஒரு புதிய சூழ்நிலைக்குள் இட்டுச் செல்கிறது. நந்தாவின் மகள் காதலனின் காரில் வந்து இறங்குகிறாள். நாகரிகக் குழைவுடனும், இரண்டு மூன்று ஆங்கிலச் சொற்றொடர்களுடனும் இவள் அறிமுகமாகிறாள். வந்ததும் வராததுமாய் ஆங்கிலப் பாடலொன்றைப் போடுகிறாள். இங்கே, ஆங்கிலம் நாகரிகத்தின் சின்னமாக மாறியிருப்பதை நோக்கக் கூடியதாயிருக்கிறது. பின்னணியில் நந்தாவின் எதிர்பார்ப்புகள் ஒலிக்கின்றன. படிப்படியாகக் கமரா தொலைவிற்கு நகர்கிறது. அதேவேளை, ஒளியின் செறிவும் படிப்படியாகக்குன்றி இருள் எங்கும் வியாபிக்கிறது. இது இன்றைய நாகரிக மோகத்தின் முடிவில் இருள்தான் எஞ்சும் என்ற பிரமையை, பார்வையாளனுக்குக் கொடுக்கிறது.

தொழில் நுட்பத் தவறுகள் சில இடங்களில் தலைகாட்டவே செய்கின்றன; அத்துடன் சில காட்சிப்படிமங்கள் ஏற்கனவே வேறு படங்களில் பாவிக்கப்பட்டுள்ளன. இருப்பினும், இவற்றைப் பெரிய குறையாக கொள்ள முடியாது.

பிரதான நடிகர்கள் நால்வருமே திறமையாக நடித்துள்ளார்கள். குறிப்பாக சுவர்ணா மல்லவாராச்சி நந்தாவாகத் தோன்றி, பிரமிக்கத்தக்க நடிப்பாற்றலை வெளிக்கொணர்ந்துள்ளார். இப்படம் இவரை புகழேணியின் உச்சிக்கு இட்டுச்செல்லும் என்பதில் ஐயமில்லை.

## கலைச்சாரல்

இப்படிப்பட்ட ஒரு காத்திரமான படைப்பைத் தந்த வசந்த ஒபயசேகரவிடம் இந்தப் படைப்பிற்கான உந்தல், அதன் பின்னணி என்பவை பற்றிக் கேட்டறிந்தவற்றைக் கீழே தருகிறேன்.:

**கேள்வி:** பாரம்பரியமாக நிலவிவரும் வரையறைகளை மீறி



'கடபதக சாயா'வில் சனத் குணதிலக, சுவர்ணா மல்லவாராச்சி, விஜய குமாரணதுங்க ஆகியோர்.

ஒரு படத்தை எடுக்க வேண்டும் என்ற எண்ணம், அதாவது உந்துதல் உங்களில் ஏற்படக் காரணமென்ன?

**பதில்:** ஆம். இது வித்தியாசமான படம்தான். அன்று தொடங்கி இன்றுவரை வெளிவந்துள்ள படங்களைக் கவனித்துப் பார்ப்பீர்களேயானால் அவை ஒரு குறிப்பிட்ட சூத்திரத்தை (Formula) பின்பற்றி வருவதை அவதானிப்பீர்கள். இவையெல்லாம் ஒரே தளத்தில் (One layer) உருவாக்கப்பட்ட படங்கள்.

அத்துடன் இன்னொரு விதத்தில் கருதுவீர்களேயானால், ஒரு ஊடகத்திற்கு (media) ஒத்ததாகத் தோன்றும் இன்னுமொரு ஊடகம், ஏற்கனவே நிலைபெற்றிருக்கும் ஊடகத்திற்கு ஒரு சவாலாக அமைகிறது. உதாரணமாக புகைப்படக்கருவி அறிமுகமாகியதும் அது ஓவியக்கலையில் பெருந்தாக்கத்தை ஏற்படுத்தியது. அதனால் ஓவியக்கலை இறந்து போகவில்லை; மாறாக, அது தனக்குரிய பாதையில் மேலும் மெருகேறி வளரத்தொடங்கியது. இவ்வாறே, தொலைக்காட்சியின் வருகையும் சினிமாத் துறையில் கணிசமான தாக்கத்தை ஏற்படுத்தியது. இதன் காரணமாக, சினிமாத்துறை வெவ்வேறு விதங்களில் வளர்ச்சியடைந்து, தனது நிலையை உறுதி செய்து கொள்ளவேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது. இதன் விளைவே சினிமாத்துறையில் ஏற்பட்டுள்ள தொழில் நுட்ப வளர்ச்சியும், புதிய தொழில் நுட்பங்களின் அறிமுகமுமாகும். ஆனால், இதில் முக்கியமான அம்சம் என்னவெனில், இதே தொழில் நுட்ப வளர்ச்சி தொலைக்காட்சித்துறையிலும் ஏற்பட்டுவருகிறது.

ஒரு ஊடகத்தை அல்லது கலையை மேலோங்கச் செய்வதாயின், அதற்கேயுரிய தனித்துவமான இயல்புகளை மேலும் வலுவடையச் செய்வதே சிறந்த வழி.

அடிப்படையில் தொலைக்காட்சி ஒரு இடையூறுடன் கூடிய ஒரு ஊடகம் (Interrupted media). தொலைக்காட்சியறையிலிருக்கும் ஏனைய தளபாடங்கள், ஒளி, மனித நடமாட்டம் இவையெல்லாம் இடையூற்றுக் காரணிகள். ஆனால் சினிமா அப்படியல்ல. அங்கே பூரண கவனிப்பு ஏற்படுகிறது. புலன்கள் திரையை நோக்கித்திருப்பப்பட்டுள்ளன. இருள் சூழ்ந்துள்ளது. இதுதான் தொலைக்காட்சிக்கும் சினிமாவுக்கும் இடையிலிருக்கும் அடிப்படை வேறுபாடு. இதுவே சினிமாவின் தனித்துவ சிறப்பியல்பு. இதனை மேலும் வலுப்படுத்தவே, சினிமாவை மேம்படுத்தும் எனக் கருதியே, பார்வையாளனை ஈடுபாடுடைய பார்வையாளனாக மாற்றுவதற்கு சில உத்திகளைக் கையாண்டுள்ளேன்.

**கேள்வி:** இத் திரைப்படத்தில் நீங்கள் கையாண்டுள்ள உத்திகளைப் பற்றி, சற்றுக் கூறுவீர்களா?

**பதில்:** ஏற்கனவே கூறியது போல, சாதாரணமாகத் திரைப் படங்கள் ஒரு தளத்திலேயே கொண்டுசெல்லப்படுகின்றன. ஆனால் இந்தப் படம் இரண்டுதளங்களில் செல்கிறது; ஒன்று ஒலி, மற்றையது ஒளி. இரண்டும் வேறுபட்டு நிற்கிறது. இந்த இரண்டையும் இணைத்து விளங்கிக்கொள்வதற்கு, சிந்தனை என்ற மூன்றாவது தளமும் தேவைப்படுகிறது. இதன் மூலம், பார்வையாளன் ஒரு ஈடுபாடுடைய பார்வையாளனாக மாறுகிறான். பார்வையாளனின் கவனம் மேலும் திரை நோக்கித் திருப்பப்படுவதுடன், திரைக்கு அப்பாற்பட்டும் சிந்திக்கிறான்.

(11ஆம் பக்கம் பார்க்க)

# தூவானம்

○ *சிங்களத் திரை உலகு*

சிங்களப் பேரினவாதத்தினுல் கட்டவிழ்க்கப்படும் ஒடுக்குமுறைகளைத்தான் நாம் எதிர்க்க வேண்டுமேயொழிய, சிங்கள மக்களையோ, அவர்களின் கலை கலாசாரத்தினையோ அல்ல.

திரைப்படம், ஓவியம், நாடகம் போன்றவை சிங்கள மக்களிடையில் மகத்தான வளர்ச்சியடைந்திருக்கின்றன. குறிப்பாக திரைப்படத்தினை எடுத்துக்கொண்டால், அவர்களை நாம் அணுகவே முடியாது. ஈழத்தில் தமிழ்த்திரைப்படத்துறையென ஒன்று வளர்ச்சியடையவில்லை; இதன் வளர்ச்சியைத் தடைப்படுத்தும் காரணிகளும், பலவுண்டு. ஆனுல் நீண்ட வரலாறும் (1931 இலிருந்து), பெருந்தொகைத் திரைப்படத் தயாரிப்பும் நிகழும் தமிழகத்திலும், நிலைமை திருப்திதருவதாக இல்லை. சமீபகாலங்களில் நிகழும் சில புறநடைகளைத் தவிர்த்தால் பிரதானபோக்கு, கலைத்தன்மைகளைப் புறக்கணிக்கிற—வியாபார வெற்றியை (இலாபத்தை) உறுதிப்படுத்துகிற — உண்மை நிலைகளுக்கு மாருக யதார்த்தமற்ற — போலி உணர்ச்சிகளை, செயல்களை வெளிப்படுத்தும் - பொழுதுபோக்குக் குப்பைகளே. 'சினிமா ஒரு காட்சி ஊடகம்' (visual medium) என்ற அடிப்படைக் கருத்தினைக்கூடப் பேணுதவையாக, அவை அமைந்துள்ளன. அதனுல்தான் அகில இந்தியரீதியில் அவற்ருல் கௌரவம் பெறமுடியவில்லை. இப்பின்னணியில், உலகரீதியில் பரிசுகளையோ பாராட்டுகளையோ அவை பெறுவதுபற்றி, எப்படிச் சிந்திக்கக் கூடும்?

நாற்பதுகளின் பிற்கூறிலேயே, முதலாவது சிங்களத் திரைப்படமான கடவுணு பொறுந்துவ (மீறிய வாக்குறுதி)தயாரிக்கப்பட்டது. 1956 வரை தென்னிந்தியாவிலும் இலங்கையிலுமாக உருவாக்கப்பட்ட சிங்களப்படங்கள், தென்னிந்தியத் தமிழ்ப்படப் பாணியிலேயே — சூத்திரப் பாங்கானதாக — உருவாக்கப்பட்டன. சிங்கள மக்களின் வாழ்க்கையை அவை யதார்த்தமாக வெளிப்படுத்தவில்லை. 1956இல் லெஸ்ரர் ஜேம்ஸ் பீரிஸ் உருவாக்கிய ரேகாவ (விதியின் கோடுகள்), மாபெரும் மாறுதலாக—சிங்கள வாழ்க்கையை அதன் இயல்பான தளத்தில்-யதார்த்தமாக வெளிக்காட்டுவதாய்—அமைந்தது. அதுவரை ஸ்ரூடியோவினுள் முடங்கியிருந்த சிங்களப் படம் அதற்கு வெளியே கொண்டுவரப்பட்டு, கதை நிகழும் இயல்பான களத்தில், படமாக்கப்பட்டது. படப்பிடிப்பிலும் 'சினிமா ஒரு காட்சி ஊடகம்' என்ற அடிப்படைக் கருத்தும் பேணப்பட்டது. அன்று உருவாகிய மறுமலர்ச்சியின் தாக்கம் இன்றுவரை தொடர்கிறது. வியாபாரக் குப்பைகள் உருவாக்கப்பட்டுக் கொண்டிருக்கும் சூழல் இருந்தாலும், காலத்துக்குக் காலம் கணிசமான தொகைப் படங்கள், கலைப்பிரக்ஞையுடன் உருவாக்கப்பட்டுள்ளன. ஒரு தொகைக் கலைப்பட இயக்குநர்கள் தத்தம் முத்திரைகளைப் பதித்துள்ளார்கள். அவர்களும், அவர்களது கலை உருவாக்கங்களும் பல்வேறு நாடுகளில், பலமட்டங்களில் பரிசுகளையும் பாராட்டுகளையும் பெற்றுள்ளன.

முக்கியமான இயக்குநர்களும் அவர்தம் கலையாக்கங்களுமென்று பார்க்கையில், பின்வருமாறு குறிப்பிடலாம்: லெஸ்ரர் ஜேம்ஸ் பீரிஸ் – கம்பெரலிய (கிராமப் பிறழ்வு), தாச நிசா (கண்களின் காரணத்தால்), ஹொலு கதவத்த (ஊமை உள்ளம்), நிதானய (புதையல்), றன் சலு (மஞ்சள் அங்கி), சந்தேஸய(தூது): சிறி குணசிங்க — சத்சமுத்ர (ஏழு கடல்கள்); ஜி.டி.எல் பெரேரா—சாமா, தஹசக் சித்துவிலி (ஆயிரம் நினைவுகள்); சௌரத் யாப்பா—ஹந்தானே கதாவ (ஹந்தானையின் கதை), மினிசா சஹ கப்புட்டா (மனிதனும் காகமும்): மஹகம சேகர — துன்மங் ஹந்திய(முச்சந்தி), பியசிறி குணரத்ன — மொக்கத உணே? (என்ன நடந்தது?; சுனில் ஆரியரட்ண—சருங்கலே (காற்ருடி): ரைற்றஸ் தொட்டவத்த—ஹந்தயா: காமினி பொன்சேகா — பரசத்துமல் (பாரிஜாத மலர்). உத்துமாணெனி (மேன்மை தங்கியவரே); W.A.B.சில்வா—ஹாலவாலி: டி.பி.நிஹால் சிங்க—மல்தெனியே சிமியோன்: சுமித்ரா பீரிஸ் —கங்க அத்தற, ஸாகர ஜலய: தர்மசேன பத்திராஜ—அகஸ்கவ்வ (ஆகாய கங்கை), பம்பறு அவித் (குளவிகள் வந்துவிட்டன); வசந்த ஒபேசேகர—வல்மத்வூவோ (வழி தவறியவர்கள்), பலங்கற்றியோ (தத்துக்கிளிகள்), தடயம (வேட்டை), கடபதக சாயா (கண்ணுடியில் பிம்பங்கள்): தர்மசிறி பண்டாரநாயக்க—ஹங்ஸ விலக் (அன்னத் தடாகம்), சுத்திலாகே கதாவ.

கம்பெரலிய 1965இல் புதுடெல்லியில் நடைபெற்ற '3 ஆவதுசர்வதேசப் படவிழா'வில், தங்க மயில் விருதினைப் பெற்றுள்ளது. முழுநீளக் கதைப் படங்களை விட (Feature films), குறும்படங்களும்(Short films) ஏராளம் உருவாக்கப்பட்டுள்ளன. மினிசா சஹ கப்புட்டா குறும்படம் 'சர்வதேசப் படவிழா'வொன்றில் இரண்டாவது பரிசினைப் பெற்றுள்ளது.

கலைப்பிரக்ஞையோடு கமராவினைக் கையாள்வது திரைப்படத் துறையில் மிக முக்கியமானதாகும். இத்துறையில் முக்கிய கலைஞர்களாக டொனல்ட் கருணரத்ன, அன்றூ ஜெயமான்ன, டி. பி. நிஹால்சிங்க, சுமித்த அமரசிங்க, எம்.எஸ். ஆனந்தன், வாமதேவன் ஆகியோரைக் குறிப்பிடலாம். பின்னிருவரும் தமிழர்கள்.

அலட்டிக்கொள்ளாமல், இயல்பான முறையில் தமது நடிப்பாற்றலை வெளிப்படுத்தும் சிறந்த நடிகர்களாக பியதாஸ குணசேகர, ஜோ அபேவிக்ரம, காமினி பொன்சேகா, ரொனி றணசிங்க, ஹென்றி ஜயசேன, டீ.ஆர் நாணயக்கார, சிறில் விக்ரம, தர்மசிறி பண்டாரநாயக்க ஆகியோரைச் சொல்லலாம். நடிகைகளில் புண்யா ஹீன்தெனிய, அனுலா கருணதிலக்க, ஐராங்கனி சேரசிங்க, தெனவக்க ஹாமினி, சுவர்ண மல்லிவாராச்சி, சிறியாணி அமரசேன, மாலினி பொன்சேகா, அஞெஜா வீரசிங்க ஆகியோர் முக்கியமானவர்கள். சில வருடங்களின் முன்னர் சர்வதேசப் படவிழாவொன்றில், உலகின் சிறந்த நடிகைக்கான விருதினை அஞெஜா பெற்றமையும் குறிப்பிடத்தக்கது.

நீலாம்பரன் □



# விமர்சனம்

## ஆலயமணி

*மாத இதழ்*

*ஆசிரியர்:* புலவர் ஈழத்துச் சிவானந்தன்

*விலை:* ரூபா 7/-

ஆலயமணி ஈழத்தில் வெளிவரும் ஒரு சமயச்சார்பு மாத இதழ். இதன் ஆசிரியர் புலவர் ஈழத்துச் சிவானந்தன். அனைவர்க்கும் தெரிந்தவர். ''வெள்ளி நாக்குப் பேச்சாளர் இவர்'' என்று சொன்னவரின் கூற்று மிகையல்ல எனும்படி, உள்ளங் கவரும் பேச்சாளர். சைவ சமயத்தில் மிகுந்த பற்றுடையவர் எனினும் மற்றைய மதத்தவரை மதித்தொழுகும் பண்புடையவர். நவீன இலக்கியத்திலும் நல்ல ஈடுபாடு கொண்டவர். தமிழ் நாட்டில் கல்வி பயின்றபோது மௌனி, க. நா. சு. போன்ற தமிழ் இலக்கியகாரருடன் இருந்த பரிச்சயத்தின் காரணமாக, அவர்களின் மறைவின் போது உணர்வார்ந்த வார்ப்புகளைத் தந்தவர்.

இத்தனையும் உள்ளடங்கிய இவரை ஆசிரியராகக் கொண்டுவெளிவரும் ஆலயமணி என்னும் இந்த மாத இதழ், சைவ சமய சம்பந்தமான கட்டுரைகளைப் பெரும்பாலும் தாங்கி வருகிறதெனினும் சிறுகதை, கவிதை, முதலான இலக்கியப் படைப்புகளையும் தாங்கியேவருகிறது. தி. ஜானகிராமன் என்ற, மறைந்த பெரும் தமிழ் எழுத்தாளரின் ''சிலிர்ப்பு'' என்ற சிறுகதை ஆலயமணியின் 3 ஆவது இதழில் மறுபிரசுரமாகியிருந்தது. மிக அருமையான ரசனையின் தேர்வோடு இதனை மறுபிரசுரம் செய்தமைக்கு, ஆசிரியருக்கு நாம் நன்றியுடையோம். எனினும் அது எந்தச் சிறுகதைத் தொகுதியிலிருந்து எடுத்தாளப்பட்டது என்ற குறிப்பும் இன்றி, அதற்குரிய ''நன்றியுடன்'' என்ற பதக்குறிப்பும் இன்றி இருந்தது வருந்

சு. வி.

தத்தக்கது. இதில் மிகக் கவனமும் சிரத்தையும் தேவை. ஒரு எழுத்தாளனுக்கு நாம் அளிக்கும் குறைந்த பட்ச கௌரவம் இது வாகும்.

ஆலயமணியில் இதுவரையும் வெளியாகிய கட்டுரைகள் பலவும் மிகுந்த சிரமத்தின் பேரில் பெறப்பட்டன வாயினும், முழுமையான ஆய்வறிவோடு எழுதப்பட்டவையாய் இல்லை என்பதை இங்கு சுட்டிக்காட்டவே வேண்டும். இது ஒரு சமய இதழ் என்பதால் இரண்டு விதமான பணிகள் இதற்குள்ளன.

1. தத்துவார்த்த ரீதியாக இந்து சமயதத்துவத்தை ஆழமாகப் புலப்படுத்துவது.

2. சமய அனுபூதிமான்களின் வாழ்க்கை நெறியை எளிய முறையில் சாதாரணரும் படிக்கும் வகையில் தருதல்.

சைவம் என்ற எல்லைக்குள்ளேயே நின்று விடாது இந்து மதத்தினதும், அவசியம் நேரிட்டால் பிறமதத்தவரதும் நல்ல அம்சங்களையும் எழுத்தில் கொண்டு வர வேண்டும். எமது சைவநூல்களை திருமுறைகளை பிறமதத்தவர் புகழ்ந்துரைக்கும் போது அதைப் பாராட்டும் நம்மவர்கள், மற்றைய சமய உண்மைகளை, அவற்றை இலக்கியமாக்கிக் காட்டும் படைப்புகளைப் பாராட்டிப் பிரசுரிக்க, ஏன் தயங்க வேண்டும்? இதன் மூலம் சைவ இலக்கியங்களை பிறமதத்தவரிடமும் கொண்டு செல்ல நல்ல ஊடகமாக இது அமைவதோடு அதன் வாசகர் பரப்பையும் அதிகரிக்கும் அல்லவா?

பெரும்பாலும் திருப்பி திருப்பி கைவசமுள்ள, அதிகம் பேசப்பட்ட சைவ இலக்கியங்களைப் பற்றிய கட்டுரைகளையே பிரசுரிக்காமல், வெளித்தெரிய வராத நல்ல இலக்கியங்களை அறிமுகம் செய்யவும், ஆய்வு செய்யவும் 'ஆலயமணி' முயற்சிக்க வேண்டும். உதாரணமாக காரைக்காலம்மையார் சேரமான் பெருமாள் நாயனுர், போன்ருேரின் பாடல்களைக் குறிப்பிடலாம். க. நா. சு. அவர்களின் 'விமரிசனக்கலை' என்ற நூலில் காரைக்காலம்மையாரின் கவிததிறன் பற்றிய கட்டுரை ஒன்று வெளிவந்த ஞாபகம் எனக்குள்ளது. அதைப்போல கரண்டிப் பார்க்கும் இலக்கிய ஆய்வுத்திறன் உள்ளவை மறுபிரசுரமானுல் கூட வரவேற்பைப் பெறும்.

சஞ்சிகையின் அமைப்பு என்ற முறையில் ஆரம்ப இதழ்களைவிட பிந்தியவை, நன்ருக வந்துள்ளன. எனினும் இன்னும் நவீனமான முறைகளைக் கையாள வேண்டும். இன்றைய வாசகன் தனியொரு விஷயத்திற்குரியவற்றை மட்டும் நாடுபவனுக இல்லாமல், பலரக விஷயதேடலும் உள்ளவன் என்பதை நினைவில் வைத்தும் செயல்பட வேண்டும். அதற்காக மணியன் போன்ற 'வியாபாரக்கும்பமேளா' க்காரரைப் போல நவரச வேஷம் தரிக்க வேண்டியதில்லை. சமூகத்தின் பல்வேறு தளவளர்ச்சி நோக்கைக் கருத்தில் கொண்டு, அதற்குரிய பார்வை வலுவைப் பெற்று, நமது சமயநோக்கு பழைய ஆசார நோக்கிலிருந்தும் விடுபட்டு, அறிவியல் நோக்கோடு வளர ஆலயமணியும் தன்பங்கை நல்க வேண்டும். வியாபார நோக்குச் சஞ்சிகைகளை வெல்ல இதுவே வழி. அத்தோடு 'ஆலய மணி' சகல சமயங்களின் ஆலயமணியாகவும் ஒலிப்பதே, இனிவரும் போக்காகும். □

## தழுவல் புள்ளிகள்

காற்புள்ளி, அரைப்புள்ளி, முற்றுப்புள்ளி, உணர்ச்சிக்குறி, வினுக்குறி முதலான நிறுத்தற்குறிகள் எல்லாம் தமிழ்மொழிக்குப் புதுமையானவை. இவை தொல்காப்பியத்திலும் இல்லை; நன்னூலிலும் இல்லை. பயன் கருதி ஆங்கில மொழியிலிருந்து தமிழில் தழுவிக் கொள்ளப்பட்டவை இவை. ஆங்கில மொழியினுல் தமிழ் மொழியில் ஏற்பட்ட புதுமைகளுள் இக்குறியீட்டு இலக்கணமும் ஒன்று. வினைமுற்றை இறுதியில் அமைத்தெழுதுவது, முற்றுப் புள்ளியின் வேலையைச் செய்து வந்தது. ஏகார ஓகார உம்மைகளும், காற்புள்ளி அரைப்புள்ளி ஆகிய இவற்றின் பணியைப் புரிந்து வந்தன. 18ஆம் நூற்ருண்டுக்குப் பின்னர் ஆங்கில மொழிப் பயிற்சி நாட்டில் மிகுந்தபோது, இந்திய நாட்டு மொழிகள் அனைத்திலும் ஆங்கில மொழியின் நிறுத்தக்குறியீட்டு இலக்கணம் மிகுதியாகப் பயன்படுத்தப்பட்டது,

— கண்ணன்

நன்றி: நல்ல தமிழ் எழுதவேண்டுமா? □

நாம் எவ்வளவு வரும்படி பெறுகிருேமோ, அதைக் கொண்டு நம் வாழ்க்கையை நடத்தி வருகிருேம் — சாத்தியமான வசதிகளோடு. ஆனுல் பிறருக்கு-- இந்த உலகுக்கு-- நாம் எவ்வளவு கொடுக்கிருேமோ, அந்த அளவில்தான் நம் வாழ்க்கை உருவாகிறது: செப்பம் அடைகிறது.

— எமர்சன்

திசையின் சிறுகதை

# நினைவுகள்

தெளிவத்தை ஜோசப்

"ஸ்டில் தேயர்......?"
பின்னால் இருந்து யாரோ முதுகில் நோண்டியதை உணர்கின்றேன்.

நான் நிற்கும் நிலையில் எனக்கு அறிமுகமான ஒருவர் அங்கிருப்பதை நான் எதிர் பார்க்கவும் இல்லை. விரும்பவும் இல்லை.

நிற்கும் இடத்தில் நேராக நிற்கமுடியாமல் முடி பூத்திருக்கும் இரண்டு முரட்டுக் கரங்களின் இடையில் நசுக்கப் படாமல் கழுத்தையும் தலையையும் காப்பாற்றிக் கொள்ளும் பொருட்டு, வேர்விட்ட இடத்தில் இருந்து வெய்யில் தேடி வளைந்து வளைந்து வேறோர் இடத்தில் தலை நீட்டும் பசும் செடிபோல்—எங்கோ தலையை வைத்துக் கொண்டிருக்கின்றேன்.

சட்டைப் பையை அழுத்தி மூடிக் காப்பாற்றிக் கொள்ள மார்புடன் பைலை அணைத்துக் கொண்டிருக்கிறது இடது கை. வலது கையின் பிடியில் மட்டுமே ஊன்றி நிற்கிறது உடல். —நிற்கிறது என்று சொல்லுவது தவறு — தொங்குகிறது! பிடி சற்று தளர்ந்தாலும் முன்னால் நிற்கும் தடித்த பெண் முதலில் தாங்கிக் கொள்வாள். பிறகு முறைப்பாள். இந்த லட்சணத்தில் பின்னாலிருந்து எப்போதோ தெரிந்த ஒருவர் எட்டி முதுகில் நோண்டி "இன்னும் அங்கே தானா" என்று கேட்டால் எரிச்சல் வராமல் 'ஆஹா அது தெரிந்த நண்பர்' என்று குளிர்ச்சியா வரும். தலையைத் திருப்பி யார் என்று பார்க்கக்கூட முடியாத நிலை. உரோமம் பூத்துக்கிடந்த கைகளில் ஒன்றை லேசாக ஒதுக்கித் தலையைத் திருப்பிப் பார்த்தேன்.

பார்வை விழுந்த பக்கங்களில் பரிச்சயமான முகம் ஏதும் தென்படவில்லை.

கேட்டல் போல் பார்த்தல் வளைந்து நெளிந்து செல்வதில் லையாதலால் முன்னே நிற்பவரின் மறைவில் நிற்கலாமோ என்று நான் எண்ணிக்கொண்டிருக்கையில் "எது வரை...?" என்னும் இரண்டாவது கேள்வியுடன் "இன்னும் அங்கே தானே" என்னும் முதற் கேள்வியையும் சேர்த்தே கேட்ட முகம் பரிச்சயமான முகமாக இல்லை.

நெருங்கிய ஸ்னேகம்இல்லாத —ஓரிருமுறை பார்த்த-பேசிப் பழகிய — நபர்களை நினைவில் வைத்திருக்க முடியாத பலவீனம் என்னை ஆட்கொள்கிறதோ...!

அவரோ நன்றாகத் தெரிந்தவர் போல் பேசுகின்றாரே! "எஸ்" என்றேன் முதற்கேள்விக்கு. "செண்ட்றல் பேங்க்" என்றேன் இரண்டாவது கேள்விக்கு.

முகம் முறுவல் காட்டிக் கொண்டது.

"நானும் ஏறத்தாழ அங்கே தான்.. ஐ ஆம் இன் த ஆர்மி" என்றவரை ஏறிட்டுப் பார்த்தேன்.

நெற்றியாகிவிட்ட பாதித்தலையைத் தவிர்த்து கரு கரு வென்று — கொஞ்சமும் நரை விழாத அடர்த்தியான முடி. கையும் புஜமும் கரணை கரணையாக ஹல்க் ஹோகன் மாதிரி. பட்டாளத்தானுக்கு ஏற்ற உடல்தான்.

இன்றைய சூழ்நிலையில் ஆர்மிக்காரன் ஒருவன் நண்பனாக இருப்பதும் நல்லது. ஜீப்புடன் ஒருநாள் வீட்டுப் பக்கம் வரச் சொல்ல வேண்டும், என்று எண்ணிக் கொண்டேன். ஆள் யாராக இருக்கும் என்னும் நினைவின் ரேகை அத்தனை துல்லியமாகவா என் முகத்தில் தெரிந்திருக்கும். "வாட் ஐ சே யூ காண்ட் றிமம்பர் மீ யுவர் கிளாஸ் மேட் ஐ ஆம் சமரசிங்க ...... வெறிபேட்... வெறிபேட்..." எனக்கு மிகவும் அசௌகர்யமாக இருக்கிறது. நாலைந்து முகங்கள் என் முகத்தை மேய்கின்றன.

"அடடே வெறி க்ளாட்" என்றுமுனகிக் கொண்டாலும் எந்த சமரசிங்க என்னும் அகழ்வாராய்ச்சியில் மனம் ஈடுபட்டிருந்தது.

கல்லூரிக்குப் பின்னாலிருந்து சதா வெள்ளைச் சட்டையும் வெள்ளைக் கால்சட்டையுமாக வருவானே.... எங்களுடனெல்லாம்அதிகம் ஒட்டாமல் —

நீலக் கால்சட்டையும் வெள்ளை சட்டையும்தான் கொலேஜ் யூனிபோர்ம் என்ற சட்டம் வந்து கிரேஸ் டைம் எல்லாம் முடிந்த பிறகும் கூட முழு வெள்ளையிலே வந்து பிரதர் மார்ஷனிடம் அசெம்பிளியில் பிரம்படி வாங்கினானே ... அவன் ... அவன் ... மாரசிங்கவாயிற்றே ......

இந்த சமரசிங்கவை எப்படி எனக்கு நினைவில்லாமல் போயிற்று ...

எனக்கு வெட்கமாக இருக்கிறது. இவனை நான் மறந்து விட்டதாகக் காட்டிக் கொள்ளக் கூடாது — அதை அவன் உணரும் படியாக நடந்து கொள்ளவும் கூடாது என்னும் உறுதிப்பாட்டுடன் ஒரு ஆச்சர்யம் கலந்த புன்னகையுடன் அவனை மீண்டும் பார்த்தேன்.

நாங்கள் பாதையில் நின்ற போது போட்டி போட்டுக் கொண்டிருந்த செலிங் கோவையும் செண்ட்றல் பேங்கையும் பார்த்து சிரித்துக் கொண்டிருந்தது இலங்கை வங்கி.

சமரசிங்கவின் கைக்குள் என் கை ஒரு விரல் போல் பிடிபட்டிருந்தது. அப்பா ... எப்படி ஒரு முரட்டுப்பிடி, உணர்ச்சியுடனேயே குலுக்கினான்.

அமிர்தலிங்கத்தை அவன் நினைவுபடுத்தினான் சிவப்பாய் — பந்துமாதிரி — சதா சீரியசான முகத்துடன் தானுண்டு தன் பாடங்களுண்டு புத்தகப் பை உண்டு — என்று சில அடையாளங்களைச் சொன்னான். ஆனால் பெயர் மறந்துவிட்டதென்றான்.

அமிர்தலிங்கம் என்று நான் நினைவு படுத்தியதும் "எஸ் எஸ" என்றான். எனது தோளை பிடித்துத் தட்டித்தந்தான். "சோ யூ ஹவ் நோட் பொர்கொட்ன் ஹிம்" என்று குதூகலித்தான்.

"பட் யூ ஹாவ் பொர்கொட்டன் திஸ் சமரசிங்க" என்று அவன் கூறுவதாகவே எனக்குப் பட்டது.

தன்னுடன் அவனும் இண்டர் வியூவிற்கு வந்திருந்ததாகவும் பிறகு காணவில்லை என்றும் எடுபட்டிருக்க மாட்டான் என்றும் சொன்னான்.

"பெயரே அலர்ஜியாகஇருந்திருக்கும் இண்டர்வியூ செய்தவருக்கு" என்றேன்.

அவன பலமாகச் சிரித்தான்.

என்னாலும் சிரிக்காமல் இருக்க முடியவில்லை.

அவன் அப்பேர்ப்பட்டதொரு பிரகிருதி.

எனது பள்ளித்தோழன் — வகுப்பறை நண்பன் ஒருவனுடைய பெயரைக் கொண்ட ஒருவரே எதிர்க்கட்சித்தலைவராகவும் பிரச்சினைக்குரிய அரசியல்வாதியாகவும் மாறியிருந்த அந்த நாட்களில் கூட இவனைப்பற்றி நான் நினைக்காததென்ன! இப்படி மனதுக்குள்ளே ஆனந்திக்காததென்ன!

வாழ்வின் அன்றாடங்கள் கழுத்தில் ஏறிய நுகமாய் மற்ற நினைவுகளை அழுத்தி விடுகின்றன.

இப்போது நுகம்இறங்கிவிட்டதென்பதல்ல. அந்த இனிய நினைவுகளின் பசுமையில் நுகம் கொஞ்சம் இலேசாகியுள்ளது.

முளைவிட்ட விதைக்கு மேல் மண்ணைக்கீறி விடுதல் போல் என் அடிமனதைக் கீறிவிட்டு விட்டான் இந்த சமரசிங்க.

முட்டி முட்டி மேலெழுந்தன முன்னை நாள் நினைவுகள்.

ஒரு முப்பது வருடம் இருக்குமா?

இன்னும் சற்றுக் கூடுதலாகவே இருக்கும்!

ஒரு நாள் இந்த ஜப்பான் பேபி வகுப்பில் அழுதுகொண்டிருந்தான், அமிர்தலிங்கத்தை நாங்கள் அப்படித்தான் அழைப்போம்.

நீல அரைக்கால்சட்டைக்குக்கீழே பெண்களின் கால்கள்போல் தடித்த அவனுடைய கால்கள் வெளிரிய மஞ்சள் நிறத்தில் பளீரென்று இருக்கும். தடித்த அந்தப் பளீர்தொடையில் பேனையால் ஒரு முகம் வரைந்தால் எப்படி இருக்கும். அவன் முகமும். அப்படியேதான் இருக்கும். ஏட்டில் வரைந்த முகம் போல்.

நெற்றி — புருவம் — கண்— மூக்கு —வாய் — உதடு — தாவாய்— என்று ஒவ்வொன்றுமே அது அதற்கான கூர்மையின்றி... மஞ்சற் பலகை போல்—

ஆகவே அவனை நாங்கள் ஜப்பான் என்றே அழைப்போம்.

எங்கள் அனைவருக்குமே அவன் நெஞ்சுக்குக்கீழே தான் இருப்பான் என்பதை விடவும் அந்த வயதில் நாங்கள் ஆர்வத்துடனும்; அடிக்கடியும் பேசிக்கொள்ளும் பெண்கள் பற்றிய கதைகளில் அவன் கலந்துகொள்ள மாட்டான். இந்தக் கதைதான் கதைக்கிறான்கள் என்று தெரிந்ததும் நைசாக நழுவிவிடுவான்.

ஆகவே ஜப்பானுடன் பேபியும் ஒட்டிக்கொண்டது.

ஒரு தேயிலைத்தோட்டத்து வாத்தியாரின் மகன் அவன். பதுளையிலிருந்து இருபது இருபத்திரண்டு மைல்களுக்கப்பாலுள்ள அந்தத் தோட்டத்திலிருந்து வருவதற்கு ஒரே ஒரு பஸ்தான் உண்டு. காலை ஐந்துக்குப் புறப்பட்டு ஒரு ஆறு ஆறரைக்கெல்லாம் பதுளை வந்துவிடும். அதே பஸ்ஸின் அடுத்த ட்றிப்பில் வந்தால் முதல் பீரியட் முடிந்து விடும். ஆகவே எட்டு மணிக்குத் தொடங்கும் கல்லூரிக்கு காலை ஆறேழுக்காலுக்கெல்லாம் வந்துவிடுவான் அமிர்தலிங்கம். யாரும் இருக்க மாட்டார்கள். போர்டிங் பையன்கள் பின்பக்கம் இருப்பார்கள். கல்லூரிக்கும் போர்டிங்ஹவுசிற்கும் தொடர்பில்லை.

அன்று வகுப்பறைகளை நோட்டம் விட்டபடி பெரிய பிரதர் வந்திருக்கின்றார்.

யாருமே இல்லாத வகுப்பறையின் மூலையில் தன்னந்தனியனாய் இவன் உட்கார்ந்திருக்கிறான்.

பிரம்பை டெஸ்கில் தட்டி "கம்" என்றவர் தன்னுடைய அறைக்குள் அவனை விட்டு, இடாப்புக்கள், புத்தகங்கள் இத்தியாதிகளை அடுக்கிவைக்கச் சொல்லிவிட்டு மற்ற வகுப்புக்கள் பக்கம் நடந்து "செப்ப"லுக்குள் நுழைந்து பின்பக்கமாக போர்டிங்கிற்குள் சென்றுவிட்டார்.

எங்கள் வகுப்பு ஷெல்டனும் போர்டிங்கில்தான்! ஒரு தேயிலைத் தோட்டத்தின் பெரிய டீமேக்கர் பையன். போர்டிங்கில் தங்கிப் படிக்கும் பணவசதியுள்ளவன். எதற்காகவோ பிரதரைத் தேடிக்கொண்டு வந்தவன் பிரதரின் ஆபீஸ் அறைக்குள் இவனை—அதுவும் யாருமே இல்லாத காலைவேளையில் கண்டதும் அவனை அருகேயழைத்து காதுக்குள் ஏதோ ரகசியமாகச் சொல்லிவிட்டுச் சென்றானாம்.

அதுதான் ஜப்பான் பேபி அழுதுகொண்டிருந்தான்.

கண்ணீருக்கான காரணத்தை யாரிடமும் கூற மறுத்துவிட்டவன் என்னிடம் ரகஸியமாகக் கூறினான். என்.கே.பி.யிடம் சத்தியமாகக் கூறக் கூடாது என்றான்.

ஷெல்டன் நல்லவன். இது போன்ற பேச்சுக்கள் மூலம்



ஒரு சுகம் யாசிக்கும் வயதினன். கேலிக்காகத்தான் கூறியிருப்பான் என்றாலும் எனக்கு அது அறவே பிடிக்கவில்லை. ஆறுதல்கூறி இவனை சமாதானப் படுத்திவிட்டு ஷெல்டன் வரும்வரை காத்திருந்தேன்.

வயதுக்கேற்றாற்போல்— வரிசையாக— இவ்விரண்டாக பெரிய பிரதர் பின்தொடர போர்டிங் பையன்கள் வந்தார்கள் என்றால் பாடசாலை தொடங்க இன்னும் பதினைந்து நிமிடம் இருக்கிறதென்று அர்த்தம்.

டெஸ்கிற்குள் புத்தகங்களை வீசிவிட்டு வெளியே ஓடினான் ஷெல்டன்—விடுதலை கிடைத்த சிறைக்கைதி போல்.

சட்டையைப் பிடித்திழுத்து நிறுத்தினேன்.

பிரதர் டிரக்டர் ரூமுக்குப் போய்விட்டாரா என்றேன்.

ஐந்துசதம் பத்துசதத்திற்கு கடலை உருண்டை வாங்க ஓடியஓட்டம் தடைப்பட்ட ஆத்திரத்துடன் "எஸ்"என்றவன் "ஏன்" என்றான்.

"அமிர்தலிங்கம் ஆறேழு தடவை தேடிவிட்டு வந்தான். கட்டாயமாகப் பார்க்கணுமாம்—ஏதோ கூறணும்னான்... இப்பக்கூட என்னிடம் கேட்டான். இவனுக்கென்னடா டிரக்டரிடம் கூற இருக்கிறது" என்றேன்.

அவன்முகம் காட்டிய கலவரத்திலிருந்து கடலை உருண்

(11ஆம் பக்கம் பார்க்க)

*ஜப்பானில் உள்ள கடற்படைத் தளமொன்றில் அமெரிக்காவின் இரண்டு அணுவாயுத கப்பல்கள் நிறுத்தப் படுவதற்கு எதிராக ஜப்பானிய மக்கள் குரல் எழுப்பியுள்ளனர். இக்கப்பலகளில் ஏதாவது விபத்துஉண்டாகுமானால் அதன்பலாபலன்களை இக்கட்டுரை ஆய்கின்றது.*

## அமெரிக்க

# அணுவாயுத போர்க்கப்பல்களிற்கு எதிராக ஜப்பானிய மக்களின் குரல்

அணுவாயுத போர்க்கப்பலானது ஏதாவது நட்புநாட்டின் கடற்படை தளத்தில் நிறுத்தப்பட்டிருக்கும் போது விபத்து ஏதும் ஏற்படின் அதனால் வரும் பின்விளைவுகளை ஜப்பான் எண்ணிப் பார்க்க வேண்டும். இது ஒரு பயங்கர அழிவை ஏற்படுத்தும். ஆயிரக் கணக்கான மக்களின் உயிரை காவுகொள்ளும். நகரத்தின் பெரும்பகுதியை சின்னாபின்னமாக்கிவிடும்.

பைவ் (Fife), பங்கர் ஹில் என்னுமிரு அணுவாயுத போர்க் கப்பல்கள் யோகோசுகா என்னும் ஜப்பானிய கடற்படைத், தளத்தில் நிறுத்தப்பட்டுள்ளன. இதனால் இப்படைத்தளம் அமைந்துள்ள கனகாவா (Kanagawa) எனும் நகரவாசிகள் (75 இலட்சம்) அமைதியிழந்து வாழ்ந்துகொண்டிருக்கின்றனர். இவ்விரு கப்பல்களும் அணுவாயுதங்களை எதிரியின் இலக்குகளை நோக்கி ஏவிவிடக்கூடிய அமைப்புக்களை தன்னகத்தே கொண்டுள்ளன. இவ்வணுவாயுதங்களை ''ரோமாகாவ்க்'' ஏவுகணைகள் என்றழைப்பர். கனகாவா நகரமக்களும், அந்நகர ஆளுனரும் இந்த ஏற்பாட்டை கைவிடுமாறு அமெரிக்காவை வேண்டிநின்றும் அது பயனளிக்கவில்லை.

ஜென்சுய்கின் எனும், ஜப்பான் நாட்டைச் சேர்ந்த அணுவாயுத எதிர்ப்பு அமைப்பொன்று 1988ஆம் ஆண்டு ஓகஸ்ற் மாதம்ஜப்பான் நாட்டின் ஹிரோசிமா, நாகசாகி என்னும் நகரங்களில் சர்வதேச மகாநாட்டை நடாத்தியது. இது அதன் 43 ஆவது ஆண்டுநிறைவு மகாநாடாகும். இதில் அணுவாயுத போர்க்கப்பல்களால் ஏற்படக்கூடிய பயங்கரமான பின்விளைவுகள் ஆராயப்பட்டன.

மக்கள்படும் மனக்கவலைக்கு காரணமில்லை. போர்க்கப்பலில் உண்டாகக்கூடிய விபத்தானது 70,000 மக்களின் உயிரைப் பறித்துவிடுமென கணக்கிடப்பட்டுள்ளது. இந்தக் கணிப்பானது கலிபோர்ணியாவிலுள்ள சுற்றுடல் ஆய்வு நிறுவனத்தாரால் வெளியிடப்பட்டவொன்றாகும். மேலும் இந்த நிறுவனமானது ஜப்பானிலுள்ள யோகோசுகா, சசேபு, குறே எனும் மூன்று கடற்படை தளங்களில் நிறுத்திவைக்கப்பட்டுள்ள அமெரிக்க அணுவாயுத கப்பல்களால் ஏற்படக்கூடிய ஆபத்தான பின்விளைவுகளைப்பற்றி ஆய்வுகள் நடாத்தியுள்ளது. இந்த ஆய்வின்படி யோகோசுகா எனும் கடற்படைத்தளத்தில் நிறுத்தப்பட்டுள்ள அமெரிக்க அணுவாயுதக் கப்பலில் ஏற்படக்கூடிய விபத்தானது புளுடோனியம் – 239 ஐக் கொண்ட கதிரியக்க மண்டலமாக சுற்றாடலை மாற்றிவிடக்கூடியது. அணுவாயுதத்தின் எந்தவொரு பகுதியிலும் ஏற்படக்கூடிய வெடிப்பானது மேற்சொன்ன அழிவிற்கு அடிகோலிவிடும். இவ்விபத்தானது ஜப்பானின் பெரிய நகரங்களான டோக்கியோ,

**மௌரீன் பீயோவ்**

யோகோசுகா என்பவற்றை உள்ளடக்கிய 100 கிலோமீற்றர் பிரதேசத்தைக் கதிரியக்க நச்சு மண்டலமாக்குவதுடன் மக்களிற்குப் பெரும் சேதங்களையும் ஏற்படுத்திவிடும்.

இந்த விபத்தை மேலும் விபரிக்கப் புகுந்தால், இவ்விபத்தின் காரணமாக வெளிப்பரவும் புளுடோனியம்-239 எனும் கதிரியக்க வஸ்துவின் அளவானது, கேடுசெய்யா சூழலிற்கு ஏற்றுக்கொள்ளப்பட்ட அமெரிக்க நியம எல்லையை விட 10,000 மடங்கு அதிகமானதாகும். இந்த கொடிய கதிரியக்க வஸ்துவானது எல்லாப் பொருட்களின் மேற்பரப்புகளிலும், கட்டிடங்களிலும் படிந்துவிடக்கூடியவொன்று. மக்களின் சுவாசத்துடன் உட்புகுந்துவிடும். இவ்வாறு உட்செல்லும் அளவானது ஏற்றுக்கொள்ளப்பட்ட அமெரிக்க நியம அளவினை விட 10,000 மடங்கு உயர்ந்தது. பல வருடங்களின் பின் புற்றுநோய் பரவுவதற்கும், பரம்பரைப் பாதிப்புகள் உண்டாவதற்கும் மூலகாரணமாகிவிடும். புற்றுநோயினால் ஏற்படும் உயிரிழப்புகள் 21,000 வரை சென்றுவிடலாம்.

அணுவெடிப்பு விபத்தொன்று ஏற்படின், உடனடியாக டோக்கியோ நகரத்து மக்கள் யாவரும் வேறொரு பாதுகாப்பான இடத்திற்கு மாற்றப்படுவதுடன், சூழலை நச்சுநீக்க வேண்டிய கட்டாயம் ஏற்படும். மிகமிக சனநெரிசலான இடத்திலிருந்து மக்களை வேறு பாதுகாப்பான இடங்களிற்கு எடுத்துச் செல்வது எவ்வளவு கடினமான விடயமென்பது சிந்திக்கத் தெரிந்த எவரும் புரிந்துகொள்வர். அவ்வாறு விபத்து ஏற்படுங்கால் மக்களை எவ்வாறு பாதுகாப்பான இடங்களிற்கு மாற்றலாம் என்ற முன்னேற்பாடான திட்டங்களை விரிவாக்க, நிபுணர்கள் மறுப்பு தெரிவித்துள்ள காரணம் இது நடைமுறைப் படுத்துவதற்கு இலகுவானதல்ல. அமெரிக்க அரசின் கணிப்பின்படி இந்த சுற்றுடல் நஞ்சு நீக்கல் செலவானது 15,000,000கோடி அமெரிக்க டொலர்களாகும். இவ்வாறு மக்களை இடமாற்றல், சூழல், சுத்திகரிப்பு என்பவற்றுக்கான பணவிரயத்தினால் ஜப்பானின் பொருளாதாரமானது மந்தநிலைக்கு வந்துவிடும்.

கடற்படை அணுவாயுத எதிர்தாக்கிகளில் (Naval propulsion Nuclear Reactors) ஏற்படும் விபத்துக்களினாலும் பேரழிவு ஏற்பட இடமுண்டு. இவை அணுவாயுதப் படகுகளில் பொருத்தப்பட்டுள்ளன.

பொதுவாகப் பாவனையில் உள்ள 100 — மெக்காவாற் எதிர்த்தாக்கி, விபத்து ஏற்படும்போது கதிரியக்க வஸ்துவான அயடின் — 132, சேசியம் — 137 என்பவற்றை டோக்கியோ நகரமெங்கனும் பரப்பிவிடும். டோக்கியோ நகரமக்களின் மீதான கதிர்வீசல் தாக்கமானது. அனுமதிக்கப்பட்ட அமெரிக்க நியம அளவிலும் பார்க்க பன்மடங்கு அதிகமாகவிருக்கும். மக்கள் பாதுகாப்பான விடங்களிற்கு இடமாற்றம் செய்யப்படாதவிடத்து, மறைமுகமான புற்றுநோய் தாக்கத்திற்கு ஆளாகுவோரின் தொகை 77530 ஆவதுடன், மேலும் இதேயளவான மக்கள் மிக மோசமான பரம்பரை பாதிப்புகளிற்கும் உள்ளாக வேண்டி வரும். இவ்வாறான விபத்தொன்று ஏற்பட்டபின் அப்பகுதியை மீண்டும் மக்கள் வாழ ஏற்புடையதாக்குவதற்கு, முதற்படியாக உடனடியாக மக்களை வேறு இடங்களிற்கு இடமாற்றவேண்டும். இரண்டாம் படியாக சூழலை நச்சுநீக்கி சுத்திகரிக்கவேண்டும். கட்டடங்களில் ஏற்பட்டுள்ள கதிரியக்கத் தன்மையை நீக்கமட்டுமே பலகோடி அமெரிக்க டொலர்கள் செலவாகும்.

இந்த அணுவாயுதக் கப்பல்களைத் தனது துறைமுகங்களுக்குள் வரவிடுவதனால் ஜப்பானானது தனக்குத்தானே பேராபத்தினை உருவாக்கியுள்ளது என்பது தெட்டத்தெளிவு. உண்மையில் இந்த ஆபத்தானது டோக்கியோவின் மையப்பகுதியில் ஒரு அணு உலையைஅமைப்பதற்கு இது ஒப்பானது.

ஜப்பானில் அணுவாயுதங்களைத் தயாரிப்பதற்கும், கைவசம் வைத்திருப்பதற்கும், அணுவாயுதங்களை நாட்டினுள் வரவிடுவதற்கும் எதிரான சட்டவிதிகள் உள்ளன. அணுவாயுத எதிர்ப்புக் கொள்கையை ஜப்பான் கொண்டிருந்தும் அது பெரிய அளவிலான அணுசக்தி அமைப்புகளை பசுபிக் பிராந்தியத்தில் கொண்டுள்ளது. அமெரிக்காவிற்கு வெளியில் அமெரிக்க இராணுவ தளங்கள் கூடுதலாக வரவேற்கப்பட்டிருக்கும் நாடாக ஜப்பான் விளங்குகிறது. ஜப்பானில் நிலைகொண்டுள்ள 55000 அமெரிக்க இராணுவத்தினருக்காக ஆண்டுதோறும் 2·5 மில்லியன் அமெரிக்க டொலர்களை யப்பான் செலவழிக்கின்றது.

மறுபுறத்தில் அமெரிக்காவோ, தன் கடற்படை கப்பல்களில் அணுவாயுதங்கள் பொருத்தப்பட்டுள்ளனவா என்பதனை உறுதிப்படுத்தவோ அன்றி மறுக்கவோ செய்யாத ஒரு கொள்கையையே இன்னமும் கடைப்பிடித்துவருகின்றது. இது ஜப்பானின் அரசியல் அமைப்பு ஒழுங்கு விதிகளிற்கு முரணானது. ஜப்பான்-அமெரிக்க பாதுகாப்பு ஒப்பந்தத்தை அமெரிக்கா மதித்து நடக்கவில்லை. போலுள்ளது. இந்த ஒப்பந்தப்படி அணுவாயுதங்கள் எவையாவது ஜப்பான் நாட்டிற்குள் எடுத்துச் செல்வதற்கு முன்னராக ஜப்பானின் ஆலோசனை பெறப்பட வேண்டும்.

இறுதியாக, இந்த அணுவாயுத கப்பல்களை நாட்டினுள் வரவிடுவதனால் கிடைக்கும் நன்மைகளை மக்களின் சுகவாழ்வுக்கேடு, சுற்றுடல், நஞ்சூட்டப்படல், நாட்டின் பொருளாதார வீழ்ச்சி என்பவற்றிற்கெதிராக சமநோக்குடன் சீர்தூக்கிப்பார்த்து சரியான முடிவெடுப்பது ஜப்பான் நாட்டரசின் தலையாய கடமையாகும்.

தமிழில்: ச. குமாரவிநாயகம்.
நன்றி: தேர்ட் வேல்ட் நெற்வேக் ஃவீச்சர்ஸ்- O

## பாட்டாளி

— ராகுலன்

அவனிடம்,
ஒரு தோற்றுப்போன வசந்தகாலம்
எஞ்சியிருந்தது.
கருவில் உடலையிழந்த உயிரொன்று
எஞ்சியிருந்தது.
காவியத்தில் தீளைத்த அந்தக்கற்பனைகள்
எஞ்சியிருந்தது.
விலைமதிக்க முடியா தத்துவங்கள்
எஞ்சியிருந்தது.
ஏதோவொரு இமைப்புரியாத உத்வேகம்
எஞ்சியிருந்தது.
புரட்சி மட்டும் இன்னமும் கர்ப்பத்திலிருந்தது.
அவன்
வாழவேண்டும்.
இழப்பதற்கு எதுவுமற்ற அவன் — இனியும்
வாழவேண்டும்.
ஏன்?
மானிடம் மண்டியிடக்கூடாது.
கருவறைகள் சிதைவுறக்கூடாது.
காவியங்கள் அழிந்து போகக்கூடாது.
தத்துவங்கள் அழுதுவிடக்கூடாது.
உத்வேகம் அடங்கிவிடக்கூடாது.
கற்பனைகள் தான் யதார்த்தத்தின் திறவுகோல்கள்.
வர்க்கங்கள்தான் மோதல்களின் அத்திவாரங்கள்.
மோதல்கள்தான் புரட்சியின் வழிகாட்டிகள்.
இனியும்,
அவன் ஏன் வாழக்கூடாது.
'வாழட்டுமே'
என்பது பதில் - அல்ல : அவன்,
வாழவேண்டும் என்பதே பதில். □

## எவருமே...

(3ஆம் பக்கத் தொடர்ச்சி)

ரிகையாளர் எவருமே எங்களைப் பற்றி எழுதுவதில்லை என்கிறார் ஷாங். டெங் கின் மாற்றுத்திட்டங்களை விமர்ச்சிக்கப் பயப்படுகிறார்கள். சீனாவின் 800 மில்லியன் விவசாயிகளில் பெரும்பான்மையோர், கூட்டுப் பண்ணை முறையை எதிர்க்கிறார்கள். உற்பத்திப் பொருட்களை தாம் விரும்பியபடி விற்பதற்கும், லாபத்தை தமதாக்கிக் கொள்வதற்கும் சுதந்திரமளிக்கும் டெங் கின் மாற்று அமைப்பின் கீழ் பெருமளவு மக்கள் பயனடைகிறார்கள். இத்திட்டம் இருபத்தோராம் நூற்றாண்டை நோக்கி வீறு நடை போடுகிறது என்று டெங் உறுதியாயிருக்கிறார்.

'மாரிகாலம் வந்ததும் நூற்றுக்கணக்கான மலர்கள் உருக்குலைகின்றன; ஒரேயொரு மலர் மட்டும் தாக்குப்பிடிக்கிறது — செந்நிறப் பிளம் மலரே அது' என்ற கவிதை, ஷாங் கின் படுக்கையறைச் சுவரில் காணப்படுகிறது.

'எவருமே பணக்காரனுமல்ல, ஏழையுமல்ல' என்ற சியாங்கின் கூற்று மீண்டும் நினைவு வருகிறது.

'எல்லோரும் எல்லாப் பெரும் செல்வமும் எய்தலாலே, இல்லாருமில்லை உடையாருமில்லை'' என்ற கம்பன் வரிகளும் நினைவுக்கு வருகின்றன.

நன்றி : நியூஸ்வீக் O

# தீபெத்திற்குச் சுயாட்சி கிடைக்குமா?

(தீபெத்தின் ஆத்மீகத்தலைவரும் உலகியல் தலைவருமான தலைலாமா தற்போது அங்கிருந்து வெளியேறி இருந்தாலும் இன்னும் அதன் தலைவராகவே கணிக்கப்படுபவர். அவர் அண்மையில் நியூஸ்வீக் பத்திரிகைக்கு, தீபெத்-சீன விவகாரம் பற்றி அளித்த பேட்டி இங்கு தரப்படுகிறது. —ஆர்)

**கேள்வி:** அண்மையில் தீபெத்தில் இடம் பெற்ற கலவரம் பெரிய அளவில் இடம் பெற்றதற்குரிய காரணம் என்ன?

**தலைலாமா:** கலகங்கள் இடம் பெறும் ஒவ்வொரு சமயமும் சீன கடுமையான அடக்குமுறைகளையே கையாண்டு வந்துள்ளது. இது தீபேத்திய இளைஞர்களின் ஆத்திரத்தைக் கூட்டவே உதவியுள்ளது. முன்னர் அவர்கள் அமைதி வழியிலேயே சென்றனர். இம்முறை கலகங்களில் பங்கு பற்றியவர்களை சீனர் படம் எடுக்க முனைந்தனர். காரணம், அதன் மூலம் அவர்களை இனங்கண்டு கைது செய்யத் திட்டமிட்டுள்ளனர். இது இளைஞர்களுக்கு இன்னும் கோபத்தையே மூட்டியது. இதனால் அவர்கள் முகங்களை மறைத்துக் கொண்டு கலகத்தில் ஈடுபட்டனர். சிலவேளை இப்படி முகங்களை மறைத்துக் கொண்டு, சீனர்களே கலவரத்தை தூண்டியிருக்கலாம்.

**கேள்வி:** சீன கலவரத்தை அடக்க ஊரடங்கும் (மார்ஷல்லோ) சட்டத்தைப் போட்டதற்கு தீபெத்திய மக்கள் ஆதரவு தந்தனர் என்றும், அக்காலத்தில் தீபெத்திய மக்கள், சீன இராணுவ வீரர்களுக்கு தேநீர், பால், பட்டர் வழங்கியதாகவும் அடிபடும் செய்திகள் பற்றி தங்கள் கருத்தென்ன?

**தலைலாமா:** இது உண்மையானால், சீன எதற்காக வெளிநாட்டவர் சகலரையும் வெளியேற்ற வேண்டும்? வெளிநாட்டவர் இச்செய்தியில் உள்ள உண்மை பொய்மை அறிய விட்டிருக்க வேண்டும்,

**கேள்வி:** அமெரிக்காவும் சோவியத் ரஷ்யாவும், தீபெத்தியர்களை தீபெத்திலிருந்து 'துடைத் தொழிக்கும்' சீனாவின் செயலை அதிகம் கண்டிக்காது விட்டமை, தீபெத்திய மக்களுக்கு அதிருப்தியை தந்துள்ளது என்பது பற்றித், தங்கள் கருத்து?

**தலைலாமா:** உண்மையில் வருந்தக் கூடிய விஷயமே. இந்த மாதிரியான நிலை சோவியத் ரஷ்யாவில் நடந்திருந்தால், மேற்கத்திய உலகின் பதில் இதற்கு மாறாக, பெரிய வடிவெடுத்திருக்கும்.

## திசைமுகன்

**கேள்வி:** இந்தியாவின் நிலைப்பாடு பற்றிய தங்கள் கருத்து?

**தலைலாமா:** இந்தியா தன்னால் இயன்றவற்றை செய்தும் உள்ளது, செய்தும் வருகிறன்து; குறிப்பாக தீபெத்தியர்களுக்கு கல்வி, புனருத்தாரணம், எமது கலாசாரத்தைப் பேணுதல் போன்றவற்றில்.

**கேள்வி:** சீன உங்களோடு பேச்சுவார்த்தை நடத்துவதற்கு முன்வந்துள்ளது. இந்தப் பேச்சு வார்த்தையால் என்ன சாதிக்கப்படலாம் என நீங்கள் கருதுகிறீர்கள்?

**தலைலாமா:** இது பற்றிய எனது அபிப்பிராயத்தை ஏற்கனவே ஐரோப்பிய நாடாளுமன்றத்தில் (Stras Bourg) கூறிவிட்டேன்; தீபெத்தியர்களுக்கென ஜனநாயக முறையில் அமைந்த, ஒரு சுயாட்சி தேவை. ஆனால் பாதுகாப்பு, வெளியுறவு, போக்குவரத்து போன்றவை சீனாவின் கையில் இருக்கலாம்.

**கேள்வி:** ஆனால் நீங்கள் ஐரோப்பிய நாடாளுமன்றத்தில் வெளியிட்ட பிரேரணையை சீன ஏற்றுக்கொள்ளவில்லையே?

**தலைலாமா:** எனது கருத்தைச் சீன தவறாகப் புரிந்து கொண்டுள்ளது. நான் தீபெத்துக்கு சுதந்திரம் கேட்கவில்லை. நாங்கள் சீனாவுடன் சுமுகமான உறவை வைத்திருப்பதன் மூலம், பயனடையவே ) , வோம். ஆனால் தற்போது நமக்கு வழங்கப்பட்டுள்ள சுயநிர்ணயம் அர்த்தமற்றது. அது நியாயமானதாக இருந்திருந்தால், இத்தகைய கலவரங்கள் இங்கு நிகழக் காரணம் இல்லை. சீன உண்மையில் தீபெத்தை அபிவிருத்தி செய்ய விரும்பினால், அது எமக்கூடாக நடைபெற வேண்டும். நாங்கள் தான் உண்மையான தீபெத்திய மக்களின் பிரதிநிதிகள். நான் குறிப்பிடும் வழிமுறையை "நடுவழி" என அழைக்கலாம்.

**கேள்வி:** தீபெத்தியர்களின் எதிர்காலம் எப்படியிருக்கும்?

**தலைலாமா:** நாங்கள் மிக நம்பிக்கை வலுவுடையவர்கள். உலகெங்கும் மாற்றங்கள், மனிதாபிமானத்தை நோக்கி செல்கிறது. அதனால் நாம் பொறுமையோடு இருப்போம்.

**கேள்வி:** உங்கள் எதிர்காலம்?

**தலைலாமா:** நான் இனிமேல் தீபெத்திய ஜனநாயக சுயாட்சி அரசியலில் பங்கெடுக்க மாட்டேன்; சாதாரண பிரஜையாகவே இருக்க விரும்புகிறேன். □

## உருளும் உலகில்

### தேர்ந்தெடுக்கப்பட்ட சில

# தேசியஇனப்போராட்டங்கள் அவற்றின் தீர்வுகள்

## சுவிட்சலாந்து

தேசிய இனப்பிரச்சினைக்கான தீர்வில் உலகரங்கில் முன்னுதாரணம் மிக்க நாடாக விளங்குவது சுவிட்சலாந்து ஆகும். ஐரோப்பாக் கண்டத்தில் அமைந்திருக்கும் இந்நாடானது இலங்கையை விடப் பரப்பளவாலும், சனத்தொகையாலும் சிறிய நாடாகும். ஆனால் இலங்கையை விடக் கூடிய மொழிகளைக் கொண்டுள்ள இந்நாடு மொழிப் பிரச்சினையின்றி அமைதி மிக்க அரசாக விளங்குகின்றது. 15,941 ச. மை. பரப்பளவைக் கொண்டுள்ள சுவிட்சலாந்து 62,69,873 மக்கள் தொகையை கொண்டுள்ளது. இதில் 64.9% ஜேர்மன் மொழியினரும், 18 1% பிரஞ்சு மொழியினரும், 11.4% இத்தாலிய மொழியினரும் ஆவர். மிகுதிப் பகுதியினர் ஏனைய இனங்களைச் சேர்ந்தவர்களாவர். இவர்களுள் 49.4% றோமன் கத்தோலிக்க மதத்தைச் சார்ந்தவர்களாயும், 47.7% புரட்டஸ்தாந்து மதத்தைச் சார்ந்தவர்களாயும் உள்ளனர். மிகுதியினர் ஏனைய மதங்களைச் சார்ந்தவர்களாவர்.

இங்கு எந்தொரு மதமும் அரச மதமாக்கப்படாமையினாலும், இங்குள்ள மூன்று பிரதான மொழிகளும் உத்தியோக மொழியாக்கப்பட்டுள்ளமையாலும், நிர்வாக ரீதியாக மூன்று இனங்களும் சுயாதிக்கமுள்ள கன்ரன் அமைப்பினைக் (Cantons system) கொண்டு உள்ளமையாலும் இனங்களிடையே மொழி, இன மத, சுயாதிக்கம் போன்ற பிரச்சினைகள் எழமுடியாது, தேசிய இனப் பிரச்சினை வரலாற்றிலேயே முதலாவதாகத் தீர்த்து வைக்கப்பட்டுள்ள ஒரு தேசமாக சுவிட்சலாந்து காணப்படுகின்றது.

இங்கு கன்ரன் அமைப்பு என்பது இயல்பாகத் தோன்றி வளர்வதற்குச் சாதகமான, புவியியற் சூழல் நிலவியது. புவியியல் ரீதியாக சுவிட்சலாந்து மலைக் குன்றுகளைக் கொண்ட ஒரு பிரதேசமாகக் காணப்படுகின்றது. மலை இடைகளுக்குள் மக்கள் குடியேறி வாழ்ந்து வந்தனர். மலைகளினால் மக்கள் பகுதி பகுதியாகப் பிரிக்கப்பட்டிருந்தனர். தனித்தனி மலைப்பகுதிகளுக்குள் உட்பட்டு வாழ்ந்து வந்த மக்கள் தம்மைச் சுயமாகவே நிர்வகிக்கும் பாரம்பரியத்தைக் கொண்டு காணப்பட்டனர். இவ்வாறான புவியியல் அமைவும், அதன் அடிப்படையிலான பாரம்பரியமும் இணைந்து கன்ரன் அமைப்பு தோன்றுவதற்கு அடிப்படையாய் அமைந்தன. கன்ரன் அமைப்பினை மூலமாகக்கொண்ட அடிப்படைக் கூட்டாட்சி முறைமை (Basic Con-federation), 1791ஆம் ஆண்டு உருவாகத் தொடங்கியது. 1798ஆம் ஆண்டு இம்முறைமையில் மேலும் முன்னேற்றம் ஏற்பட்டது. 1803ஆம் ஆண்டு கூட்டாட்சி முறைமை மேலும் அதிக உரிமையுள்ளதாய்த் திருத்தி அமைக்கப்பட்டது. அடுத்து 1847ஆம் ஆண்டு இன்றிருப்பதைப் போன்ற சமஷ்டி அமைப்பு (Federation) உருவாக்கப்பட்டது. இந்த வகையில் கன்ரன்களை அடிப்படையாகக் கொண்ட சமஷ்டி முறை உருவாக்கப்பட்டது. இன்று மொத்தம் 22 கன்ரன்கள் காணப்படுகின்றன. இவற்றில் 15 கன்ரன்கள் ஜேர்மனிய இனத்தவர்க்குரியதாகவும், 6 கன்ரன்கள் பிரெஞ்சு இனத்தவர்க்குரியதாகவும், 1 கன்ரன் இத்தாலிய இனத்தவர்க்குரியதாகவும் உள்ளன.

ஹெல்வெற்றி குடியரசு (Helvetie Republic) காலத்தில் 19ஆம் நூற்றாண்டில் சுவிட்சலாந்திலுள்ள 1% த்தினர் பேசும் றோமன் தவிர்ந்த ஏனைய மூன்று மொழிகளாகிய ஜேர்மன், பிரஞ்சு இத்தாலி ஆகிய மொழிகள் உத்தியோக மொழியாக்கப்பட்டன. இவ்வாறு ஒரு தேசத்திலுள்ள பல மொழிகளும் உத்தியோக மொழிகளாக்கப் பட்டமை உலகிலேயே முதல் முறையாகச் சுவிட்சலாந்திற்தான் இடம் பெற்றது. ஒரு சிறிய தேசம் மூன்று மொழிகளை உத்தியோக மொழிகளாக்கி நிர்வாகச் சிக்கலின்றி திறம்படச் செயல்பட்டு வருவதனையும், அதே வேளை சகல இனங்களும் பகைமையின்றி, ஐக்கியப்பட்டு வாழ்வதனையும் காணமுடிகின்றது.

சுவிட்சலாந்தின் மத்திய அரசில் இரு சபைகள் உள்ளன. ஒன்று தேசிய இனங்களின் சபை (Chamber of Nation-alities), மற்றயது மக்கள் சபை (Chamber of People) தேசிய இனங்களின் சபையில் 44 அங்கத்தவர்கள் இடம் பெறுவர். ஒவ்வொரு கன்ரனிலுமிருந்து தலா 2 உறுப்பினர்கள் வீதம் இச்சபைக்குத் தெரிவாகுவர். மக்கள் சபையும், தேசிய இனங்களின் சபையும் சட்டத்தை இயற்றுவதில் சம அதிகாரம் உடையவை. ஏதாவது ஒரு சபையால் நிராகரிக்கப்படும் மசோதா சட்டமாக முடியாது. இந்த வகையில் சட்டவாக்கத்தில் சகல இனங்களுக்கும் பங்கும், பாதுகாப்பும் உண்டு.

மத்திய அரசின் நிர்வாகத்தைப் பொறுத்தவரையிலும் இங்கு சகல இனங்களுக்கும் அதிற் பங்குண்டு. ஏழு உறுப்பினர்களைக் கொண்ட நிர்வாகசபையில் பிரெஞ்சு, இத்தாலிய இனங்களைச் சேர்ந்த அங்கத்தவர்கள் குறைந்தது இருவராவது அங்கம் வகிக்க வேண்டுமென யாப்பில் வரையறுக்கப்பட்டுள்ளது.

மொத்தமாகப் பார்க்கும் போது இங்கு மதசார்பற்ற அரசு, இனங்கள் பிரதேச ரீதியான சுயாதிக்கத்துடன் காணப்படுகின்றமை, மூன்று மொழிகளும் உத்தியோக மொழிகளாக்கப்பட்டமை, மத்திய அரசில் சட்டவாக்கம், நிர்வாகம் ஆகியவற்றில் சகல இனங்களுக்கும் பங்கு இருக்கின்றமை போன்ற காரணங்களினால், சுவிட்சலாந்தில் தேசிய இனங்களிடையேயான பிரச்சினை சுமூகமாகத் தீர்த்து வைக்கப்பட்டுள்ளது. □

## சர்வதேசி

# தமிழ் - முஸ்லிம் இனக்கலவரம் - என்ன செய்யப்பட வேண்டும்?

நடந்து முடிந்த இக்கலவரத்தில் மக்களால் விடப்பட்ட தவறுகள் என்ன என்பதை ஆராயும் பொழுது ஒரு முக்கியமான பிரச்சினைக்கு முகம் கொடுக்க வேண்டியுள்ளது. அதாவது லெனின் கூறியதுபோல் பெரும்பான்மை இனம் சிறுபான்மை இனப் பொருட்டு தாராளமாக நடந்து கொள்ளும் முன்மாதிரியின் மூலமே சிறுபான்மை இனத்துடனான உறவை வலுப்படுத்திக் கொள்ள முடியும் என்பதை நான் முற்று முழுதாக ஏற்றுக் கொள்கிறேன். ஒரு புறத்தில், எம்மிலும் பெரும்பான்மை இனமான சிங்கள மக்களைப் பொறுத்து நாம் எதனைக் கோருகிறோமோ அவற்றை எம்மிலும் சிறுபான்மை இனமாயிருக்கும் முஸ்லிம் மக்களுக்கு அளிக்க நாம் தயாராயிருக்க வேண்டும். இல்லையெனில் எமது போராட்டம் இனவெறிக்கு எதிரான போராட்டம் என்றில்லாமல் இனவெறியாலான போராட்டமாகிவிடும்.

— நாகரத்தினம்

["85 கிழக்கு மாகாண தமிழ் - முஸ்லிம் இனக்கலவரம் — யார் பொறுப்பு" என்னும் நூலிலிருந்து]

## நினைவுகள்...

(8ஆம் பக்கத் தொடர்ச்சி)

டை மறந்து விட்டதை உணர்ந்துகொண்டேன்.

பேயறைந்தவன் மாதிரி என்னையும் இழுத்துக்கொண்டு வகுப்பறையின் ஒரு மூலைக்கு வந்தான். அமிர்தலிங்கம் அதே இடத்தில் இருக்கிறான் –இவன் பதறுகிறான். பரக்கப் பரக்க விழிக்கிறான். என்னிடம் ஏதோ கெஞ்சுவதுபோல் தெரிகிறது.

ஷெல்டன் இப்படிச் சொன்னான் என்று பிரதர் காதில் விழுந்தால் போதும். அவரைப் பற்றி என்னைவிட அவனுக்கு அதிகமாகவே தெரியும்.

வகுப்புக்கள் நடக்கும்போது கைகளைக் கட்டிக்கொண்டு வராந்தா வழியே நடப்பார். வகுப்பை விட்டு வெளியே நிற்பவர்கள் — வாங்குமேல் நிற்பவர்கள் — என்ன செய்தார்கள் என்று விசாரிப்பார்.

அங்கியைத் தடவி வலது கையை பைக்குள் விட்டார் என்றால் நீட்டமாகப் பிரம்பு வெளியே வரும். விளாசினார் என்றால் கேள்வி கேப்பாடு கிடையாது.

இது போன்ற பேச்சுக்கள் என்றால் முழுக்கல்லூரியையும் முன்னால் நிற்க வைத்து மேடையில் ஏற்றி பப்ளிக் கேனிங்கொடுப்பார். போர்டிங் கைவிட்டு விரட்டுவார். பிறகு ஸ்கூலை விட்டு விரட்டுவார்.

துடித்துப் போனான் ஷெல்டன். எஸ். எஸ். சி. இறுதி ஆண்டு மாணவன் — இப்போது போய் விரட்டப்பட்டால் ......

''இது தான் நடந்தது; சும்மா கேலிக்காகத்தான் சொன்னேன்'' என்று என்னிடம் பாவசங்கீர்த்தனம் செய்து கொண்டான்.

நான் பார்த்துக்கொள்ளுகின்றேன். நீ ஐப்பானிடம் மன்னிப்புக்கேள் என்றேன் — ஒத்துக்கொண்டான். இருவரையும் சமாதானப்படுத்தியாகி விட்டது.

''என்னடா மூவருமாக சதித்திட்டமா? என்றபடி வந்து சேர்ந்தான் என்.கே.பி.

அவனைக் கண்டதும் அமிர்தலிங்கம் என்னைப் பார்த்தான். 'சொல்லமாட்டேன் பயப்படாதே' என்று கண்ணால் காட்டிவிட்டு 'ஒண்ணுமில்லையடா...... சும்மா தான்' என்று சமாளித்தேன்.

இந்த என்.கே.பி. எங்களுக்குத் தலைவன் போல். அதற்கான காரணம் அவனுடைய வயதும்: வாயும்: சதா பேசிக் கொண்டே இருப்பான். பேச்சில் முக்கால் வாசிக்கும்மேல் செக்ஸ்தான். வயது அப்படி. பேசும்போது வாயோரம் இரண்டிலும் எச்சில் நுரைக்கும். நாவால் துடைத்து துடைத்துக் கொண்டு பேசுவான். வரும்போதே ஏதாவது ஒரு விஷயத்துடன் தான் வருவான்.

எங்களுக்கு ஆங்கிலப்பாஷையும் இலக்கியமும் எடுப்பவர் ஒரு பிரதர். பிரண்டன் என்று பெயர். ஒரு தடவை கூறினார். 'இப் யூ கேன் கீப் யுவர் மவுத் க்ளோஸ்ட் போர் எப்வுட் டென் மினிட்ஸ் ஐ வில் கிவ்யூ ஏ பிரசண்ட்'' என்று. கொஞ்சநேரம் கழித்து அவனிடமே ஒரு கேள்வி கேட்டார். பதிலே இல்லை. பக்கத்து டெஸ்க் புகார்தீன் கூறினான். ''ஹி இஸ் டிட்டர்மின்ட் டு ரிஸீவ் த பிரசண்ட் ப்ரம் யூ பிரதர்'' என்று.

இவனுடைய பெயர் என். கே. பெரியசாமி. நாங்கள் அவனை அன்புடனும் அடக்கத்துடனும் அழைப்பது என். கே. பி.

ஒரு தடவை உள்ளே நுழையும் போதே ''ஏய் நமக்கெல்லாம் பூனை தெரியும் ஆனால் எவனாவது பார்த்திருக்கியா'' என்று ஆச்சர்யத்தைக் கிளப்பியபடி வந்தான். அதே வேளை உள்ளே நுழைந்தவர் எங்களுடைய தமிழ் ஆசிரியர், ஜெமினி என்று எங்களால் செல்லமாக அழைக்கப்பட்ட பொன்னம்பலம் சேர். அழகானவர் —அதற்காகத் தான் ஜெமினி —

''என்னவாம் பெரியசாமி பூனைக் கதை சொல்றான்'' என்றார்.

''இல்லை சேர் நாய்கள் றோட்டு வழியே திரிவதைப் போல் பூனைகள் திரிவதில்லையே ...... அதைப் பற்றி ... '' என்றான் என். கே. பி.

''விசரன் விசரன், விழல் கதைகளை விடமாட்டான்'' என்றபடி புத்தகங்களை மேசை மேல் வைத்து விட்டு சென்று விட்டார்.

அவர் தலை மறைந்ததும் ''ஜெமினி நாம் நெனைக்கிற மாதிரி இல்லையடா விஷயங்களை நல்லாகவே விளங்கிக்கிறார்'' என்று மகிழ்ந்தான் என். கே. பி.

ஸ்கூட்டர் டக்ஸிக்காரன் ஒருவன் ஊத்தைப் பேச்சில் பேசிக் கொண்டு போனான். கற்பனை சுகத்தில் பாதை நடுவில் நடந்து கொண்டிருந்த என்னையும் இழுத்துக் கொண்டு ஓரத்துக்கோடினான் சமரசிங்க.

இத்தனை பிரபல்யம் பெற்ற என். கே. பி யை ஏன் இவன் நினைவுகூரவில்லை. அவன் நினைக்கிறானோ இல்லையோ என்னை நினைக்க வைத்து விட்டான்.

(அடுத்த இதழில் முடியும்)

## கடபதக...

(6ஆம் பக்கத் தொடர்ச்சி)

**கேள்வி :—** இந்த திரைப்படத்தின் கதை ஒரு குறித்த வரையறைக்குள் அமையாது, சமூக வாழ்வின் பல்வேறு பரிமாணங்களையும், பிரச்சினைகளையும் தழுவி நிற்பதால், முழுக்கருத்துகளையும் கிரகித்துக் கொள்ளக் கூடியதாக இருக்கும் என நீங்கள் கருதுகிறீர்களா?

பதில் ; நிச்சயமாக. ஒன்றையும் நாங்கள் மறைக்க முடியாது; மறைக்கவும் கூடாது. சாதாரணமாகவே, ஒருவருக்கு மூன்று விதமான வாழ்க்கை இருக்கிறது. அறிவு சார்ந்த வாழ்க்கை (professional life); தனிப்பட்ட வாழ்க்கை (Personal life), இரகசிய வாழ்க்கை (private life). இவை மூன்றும் அப்பட்டமாக வெளிக் கொணரப்பட வேண்டும். ஒன்றை மறைத்து ஒன்றைக் காட்டுவதில் அர்த்தமில்லை. உண்மையான கலை, இவை யாவையும் வெளிக்காட்ட வேண்டும்.

இன்றைய சமுதாயத்தில், தனிப்பட்ட ஈடேற்றத்தின் பாதையில் உண்மையான மனிதத்துவம் அழிந்து போய் விடுகிறது. முன்னேற்றம், பணம், இவைதான் முதன்மை பெறுகின்றன; மன அமைதி அற்றுப் போகின்றது. இவையெல்லாம் நிர்வாணமாகக் காட்டப்பட வேண்டும். இவற்றையே, நான் இப்படத்தில் வெளிக்கொணர்ந்துள்ளேன். இப்படி வெளிக் கொணருகையில் பல்வேறு பிரச்சினைகளையும் தழுவுவது, தவிர்க்க முடியாததாகிறது. ஏனெனில், இவையெல்லாம் வாழ்க்கையுடன் பின்னிப் பிணைந்துள்ளன.

**கேள்வி :** பின்னணி இசை இல்லாது இப்படத்தை எடுத்துள்ளீர்கள். திரைப்படத்திற்கு பின்னணி இசை அவசியமற்றது எனக் கருதுகிறீர்களா?

பதில் : உண்மையில் ஒரு பரிசோதனை முயற்சிதான். காலத்துக்குக் காலம் பின்னணி இசை இல்லாத படங்கள் வெளிவந்துள்ளன. ஆயினும், சிங்கள சினிமாவைப் பொறுத்தவரையில் இதுவே பின்னணி இசை இல்லாத முதற்படம்.

சில படங்களைப் பார்க்கும் போது, அருகாமையில் எங்கோ வாத்தியக் கச்சேரி நடப்பதைப் போன்ற ஒரு பிரமை ஏற்படுகிறது. பின்னணி இசை அவசியமற்றது என நான் கூற விழையவில்லை. நீண்ட கால ஆய்வின் அடிப்படையிலேயே, இசை எந்த அளவிற்குத் தேவை என்ற முடிவிற்கு வரலாம். தற்சமயம் இவ்விடயம் பற்றி நான் சில கருத்தரங்குகளை நடத்தியுள்ளேன்; கட்டுரைகளும் எழுதியுள்ளேன். துரதிர்ஷ்டவசமாக சிங்கள மொழியிலேயே இவை அமைகின்றன.

மொஸ்கோசர்வதேசதிரைப் பட விழாவிற்கு இப்படத்தினை அனுப்ப உத்தேசித்திருப்பதாகவும், ஒபயசேகரா கூறினார். □

---

□ எண்ணிக்கையின் பலம் கோழைகளுக்கே மகிழ்ச்சி தரும். தனித்துநின்று போராடுவதில் தீரம்மிகுந்தவர்கள் பெருமையடைகின்றனர்.

— மகாத்மா காந்தி

□ துணியுங்கள்! உங்களை அர்ப்பணியுங்கள். நீங்கள் படும் துன்பங்கள் எதுவும் வீணாகாதென்ற உறுதியுடன் அமைதியடையுங்கள். எதிர் வரும் நூற்றாண்டுகள் பலவற்றிற்காக நீங்கள் பாடுபடுகிறீர்கள். எனவே உரிய இலக்கை அடையவில்லையே என்று நீங்கள் குறைப்பட்டுக் கொள்ளாதீர்கள்.

உங்கள் வாழ்க்கைக் காலத்தையும் வெகுவாக மிஞ்சும் பணியொன்று கிடைத்தமைக்காக மகிழ்ச்சி கொள்ளுங்கள். ஏனெனில் மரணமிலாப் பெருவாழ்வை அனுபவிப்பதில் இணைந்துகொள்ள ஒரு வழி அதுவாகும்.

— ரோமயின் ரோலந்து
(பிரான்சிய அறிஞர்)

## நிகழ்வுகள்!

### 19-4-89 - புதன்

கம்பஹா மாவட்ட அரச, எதிர்க்கட்சி நா.உ.கள் ஜனாதிபதியைச் சந்தித்த கூட்டத்தில் சிறிமா பண்டாரநாயக்கா கலந்துகொள்ளவில்லை□ பிற்பகல் அரியாலையில் நடந்த மினிபஸ்—லொறி விபத்தில் 6 பேர் காயமடைந்து யாழ்.ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டனர்□ காலபோக நெற்செய்கை இம்முறை யாழ் மாவட்டத்தில் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதாக, விவசாயத் திணைக்கள முதல்கட்ட மதிப்பீடு தெரிவிக்கிறது□ அரசுடன் பூர்வாங்கக் கலந்துரையாடலுக்குப் பிரதிநிதியை நியமிக்குமாறு, ஜே.வி.பி.யை ஜனாதிபதி அழைத்துள்ளார்□ திருமலைக் கச்சேரி ஊழியர்கள், பாதுகாப்பின்மை காரணமாக வேலைக்குச் செல்ல மறுத்து வருகிறார்கள்□ திருநெல்வேலி செங்குந்தா வீதியில், கொள்ளைச் சம்பவம் இடம்பெற்றது□ சுழிபுரம் கிழக்கில் நிகழ்ந்த மோதலில் 3 இளைஞர்கள் உயிரிழந்தனர்□ தென்னிலங்கையில் இரண்டு கண்ணிவெடித் தாக்குதல் நிகழ்ந்தது. 15 படைவீரர் அதிர்ஷ்டவசமாகத் தப்பினர்□

### 20-4-89 - வியாழன்

யாழ்.திருமறைக் கலாமன்றம் ஒழுங்கு செய்த 'தமிழர் பண்பாடும் திருமறையும்' முழுநாள் நிகழ்ச்சி, மறைக்கல்வி நடுநிலைய மண்டபத்தில் நடைபெற்றது□ எரிபொருள் விலை அதிகரித்துள்ள போதிலும், மினிபஸ் கட்டணம் அதிகரிக்கப்படமாட்டாதென, வட பிராந்திய மினிபஸ் சங்க சமாசப் பொதுச் செயலாளர் தெரிவித்தார்□ கடந்த பொதுத்தேர்தலில் போட்டியிட்ட மு.செல்லையா யாழ். கல்வியங்காட்டுப் பகுதியில் சுட்டுக்கொல்லப்பட்டார்□ வவுனியாவிலிருந்து யாழ். நோக்கி வந்துகொண்டிருந்த இ.போ.ச. பஸ்மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்யப்பட்டது; கல்வீச்சும் மேற்கொள்ளப்பட்டது. இதில் ஒரு பயணி காயமடைந்தார்□ நெல்லியடி பஸ்நிலையத்தைச் சுற்றித் தடைகள் போடப்பட்டிருப்பதால், பயணிகள் அவதியுறுகின்றனர்□ ஹற்றனுக்கும் கொட்டகலைக்குமிடையில் ரயில் தடம் புரண்டதில், ஒருவர் பலியானார்; 20 பேர் காயமடைந்தனர்□

### 21-4-89 - வெள்ளி

யாழ்.உதைபந்தாட்டச் சங்கம் நடத்தும் 'யாழ். அப்போதிக்கரீஸ் கிண்ணத்துக்கான' 11பேர் கொண்ட உதைபந்தாட்டப்போட்டி பாஷையூரில் இன்று ஆரம்பமாகியது. □அதிகாலை நான்கு ஹெலிகொப்ரர்களில் நெடுந்தீவில் வந்திறங்கிய இந்தியப் படையினர், அதனைச் சுற்றிவளைத்தனர்□ வதிரிச் சந்தியில் 55 வயதான பொலிஸ் சார்ஜன்டின் சடலம் சூட்டுக் காயத்துடன் கிடந்தது. இவர் நவிண்டிலைச் சேர்ந்தவர்□ மல்லாகம் ரயில் நிலையத்துக்குச் சமீபமாக 18வயது இளைஞனின் சடலம் சூட்டுக்காயத்துடன் காணப்பட்டது. அருகில் துண்டுப் பிரசுரமும் கிடந்தது□ காலி மாவட்டத்தில் ஒரு பொலிஸ்காரரும், ஒரு படைவீரரும் கொல்லப்பட்டனர்□ பண்ணாகம், சுழிபுரம் பகுதிகளில் தேடுதல் இடம்பெற்றது. துப்பாக்கிச் சூட்டினால் 40 வயதுப் பெண் மரணமானார்□

### 22-4-89 - சனி

காலை பருத்தித்துறையில் துப்பாக்கிச்சூடு, ஷெல் அடிகளினால் பதற்றம் நிலவியது□ புதுடெல்லிக்கு மாறிச்செல்லும் அமைதிப் படையின் யாழ்.நகரக் கமாண்டர் பிரியாவிடைச் செய்தியொன்றை விடுத்தார்□ மட்டக்களப்புப் பகுதியில் இந்தியப் படையினருடன் இலங்கைப் பொலிசார் ரோந்து செல்கின்றனர்□ இந்தியாவின் புதிய தூதர் கொழும்பு வந்து சேர்ந்தார்□ கல்முனையில் நிகழ்ந்த அசம்பாவிதங்களைத் தொடர்ந்து ஊரடங்கு உத்தரவு நடைமுறைப்படுத்தப்படுகிறது□

### 23-4-89 - ஞாயிறு

கல்முனையில் நிலைமை மோசமடைந்திருப்பதைத் தொடர்ந்து அமைச்சர்களான ரஞ்சன் விஜேரத்ன, ஏ.ஆர்.மன்சூர் ஆகியோர் அங்கு சென்றனர்□ பண்ணாகத்தில் இடம்பெற்ற தீவைப்பு, துப்பாக்கிப் பிரயோகம், துன்புறுத்தல்களைக் கண்டித்து பண்ணாகப் பெண்கள் ஊர்வலம் சென்றனர்; அமைதிப்படை அதிகாரிகளிடம் அறிக்கையொன்றையும் கையளித்தனர்□ தமிழ் பேசும் மக்களிடையில் மோதலேற்பட்டால், பேரினவாத சக்திகளேஇலாபமடையுமென முஸ்லிம் கொங்கிரஸ் தலைவர் எம்.எச்.எம் அஷ்ரப் கூறினார்□

### 24-4-89 - திங்கள்

'யுனிசெப்' குழுவினர் யாழ். நகரின் பல பகுதிகளுக்கும் சென்று பார்வையிட்டனர்□ மீண்டும் இலங்கை வருமாறு ராஜீவுக்கு ஜனாதிபதி அழைப்புவிடுத்தார்□ நுகேகொடையில் வங்கிக்கு எடுத்துச்செல்லப்பட்ட 9 இலட்சம் ரூபா கொள்ளையடிக்கப்பட்டது□ 6 இலட்சம் ரூபா பெறுமதியான நூல்களை அமெரிக்கத் தூதர் யாழ்.மாநகரசபை நூலகத்திற்கு, நேரில் வருகைதந்து வழங்கினார்□

### 25-4-89 - செவ்வாய்

ஏழாலைப்பகுதியிலும், யாழ். பழம் வீதியிலும் மோதல் சம்பவங்கள் இடம்பெற்றன□ யாழ். செயலகத்தின் பல பிரிவுகள் செயலிழந்தன. சிவில் நிர்வாகச் சீர் வைப்பே காரணம்□ புனர்வாழ்வு நிவாரணக் கொடுப்பனவு மோசடியில் சம்பந்தப்படுபவர்மீது கடும்நடவடிக்கை எடுக்கப் போவதாக, மட்டக்களப்பு அரசாங்க அதிபர் கூறினார்□

திசை
THISAI

# திசைமுகம்

*''சுதந்திர ஒளியினில் மனங்குளி
அதன்வழி திசையெலாம் துலங்கவே''*

## பேச்சும் செயலும்

தமிழ் இளைஞர்கள், தமிழ்ஈழமக்களின் உரிமையை வென்றெடுப்பதற்காக ஆயுதம் தூக்கிய கடந்த சொற்ப காலத்துக்குள் பலவிதமான பலமட்டப் பேச்சு வார்த்தைகள் அரசாங்கத்துக்கும் போராட்டக் குழுக்களுக்குமிடையே நடந்தேறியுள்ளன.

அப்பேச்சு வார்த்தைகளின் போதெல்லாம் இந்தியா ஒரு மத்தியஸ்தராகவோ, அல்லது அப்பேச்சுவார்த்தைகளின் சூத்திரதாரியாகவோ இயங்கியுள்ளமையும்முக்கியமான ஒன்று.

ஆனல் அவற்றின் பலாபலன்கள் இறுதியில் எதையும் சாதிக்காதவையாக ஓசையெழுப்பிய வெற்றுச் சலசலப்புகளாகவே முடிந்தன.

தமிழ்மக்கள் திரும்பத்திரும்ப ஏமாற்றப்பட்டவர்களாகவே இருந்தனர்.

இப்பொழுது மீண்டும் ஒரு பேச்சுவார்த்தை, விடுதலைப் புலிகளுக்கும் அரசாங்கத்துக்கும் இடையே நடைபெறுவதற்கான ஒழுங்குகள்: ஆனல் ஒரு வித்தியாசம்; இதில் இந்தியா நடுவராகவோ, சூத்திரதாரியாகவோ இல்லாமல் ஆதரவுகாட்டும் பார்வையாளராக நிற்பது முக்கியமாகும்.

இதற்கு முன்னர் நடந்த பேச்சுவார்த்தைகள் ஏன் தோல்வி கண்டன?

உண்மையில் இப்பேச்சுவார்த்தையில் முக்கிய பங்கு வகித்த இலங்கை அரசு இப்பிரச்சினையை இழுத்தடிப்பதற்காகவே பாவித்ததேயொழிய தீர்ப்பதற்காகவல்ல. அதுவே முன்னைய ஜனதிபதி ஜே.ஆரின் ராஜதந்திரம் என்றுகூடச் சொல்லலாம்.

அவருக்கு ஆலோசனை வழங்கிய பாதுகாப்பு அமைச்சரான லலித்தும் சுமுகமான பேச்சுவார்த்தைகள் மூலம் தீர்ப்பதில் நம்பிக்கை வைத்திருக்கவில்லை. அவரின் பரிகாரம் அனைத்தும் ராணுவத்தீர்விலேயே வேட்கை கொண்டிருந்தது.

ஆனல் அவற்றின் பெறுபேறுகளை லலித்தும் சரி, ஜே.ஆரும் சரி தனிப்பட்ட ரீதியிலும் பொதுப்பட்ட ரீதியிலும் அனுபவிக்க வேண்டியிருந்ததை மறந்திருக்க மாட்டார்கள்.

பொதுப்பட்ட ரீதியில் இலங்கை தன்னுநிக்கத்தை இழந்தமைக்கு இவர்களின் பொறுப்பு முக்கியமானது.

தற்போது விடுதலைப்புலிகளோடு பேச்சுவார்த்தைகள் நடத்தவிருக்கும் அரசு, இதை கவனத்தில் கொள்ளல் வேண்டும். இப்பேச்சு வார்த்தைகளை, இன்றைய ஜனதிபதி ஜே.வி.பி.யை தனிமைப்படுத்துவதற்கும் அவர்கள் பிரதிநிதித்துவப்படுத்தும் சிங்கள மக்கள் பிரச்சினையை ஊறவைப்பதற்கும் உரிய தந்திரமாகவும் கொண்டால் முன்னவர்கள் செய்த தவறையே இவர்களும் செய்தவர்களாவர்.

ஆகவே இதிலிருந்து நாம் முக்கியமான ஒரு பாடத்தைக் கற்றுக்கொள்ள வேண்டும்: பேச்சுவார்த்தைகள் என்பவை வெறும் தந்திரோபாயங்களாக இருக்கக்கூடாது.

முக்கியமாக தமிழ்பேசும் இனத்தின் விமோசனத்துக்கு வழிவகுப்பதாக இப்பேச்சுவார்த்தை அமையவேண்டுமென எதிர்பார்க்கிறோம்.

பார்வையாளனக நிற்கும் இந்தியா இதை மேலும் ஊக்குவிக்கும் என்றும் எதிர்பார்க்கிறோம்.

# என்னே ஜனதிபதியின் தியாக உணர்வு!

புதிய ஜனதிபதி துணிச்சல் மிக்கவர் தான்.

நாட்டிலே அமைதி ஏற்படுவதற்கு, உயிர்த்தியாகமே செய்வதற்கு தான் தயார் என அறிவித்துள்ளார்.

தனது கண்களைக் கட்டி, ஜே.வி.பி.யினர் தன்னை தமது மறைவிடக் குகைகளுக்கு அழைத்துச் சென்று பேச்சுவார்த்தை நடாத்த தயார் என்றுல், தான் — தனது உயிரைத் துச்சமென மதித்து — அவர்களுடன் பேசத்தயார் என ஜனதிபதி பிரகடனம் செய்யும் போது, அவரது அமைதி வேட்கையும் தியாக உணர்வும் பெரும்பாலோரைக் கவரத்தான் செய்யும் (ஜே.வி.பி.யினரை ஈர்க்குமோ என்பது வேறு விடயம்).

ஜனதிபதியின் அமைதி வேட்கையும், தியாக உணர்வும் இத்துடன் நிற்கவில்லை.

ஜே.வி.பி.யினரும், விடுதலைப் புலிகளும் பிரதான அரசியல் ஓட்டத்தோடு இணைவதற்குத் தயார் என்றுல் நாடாளுமன்றத்தையே கலைப்பதற்கும் தான் தயார் என்கிறர் ஜனதிபதி பிரேமதாச. (தான் பதவி துறப்பது பற்றி பேச்சு மூச்சில்லை).

ஒரு சங்கடம்.

அரசமைப்பின் படி, நாடாளுமன்றம் தெரிவு செய்யப்பட்ட முதலாண்டில் அதனைக் கலைப்பதற்கு ஜனதிபதிக்கு அதிகாரமில்லை.

இதனை மாற்றுவதற்கு உடன்பாடு தெரிவிக்க ஆளும் கட்சி உறுப்பினர்களுக்கு என்ன பைத்தியமா? அவர்களும் உயிரைக் கையில் பிடித்துக் கொண்டுதானே நாடாளுமன்றத்திற்குள் புகுந்தனர்?.

மீண்டும் தேர்தல் களத்தில் குதித்து, தமது உயிரைப் பணயம் வைத்து, தியாகியாகுவதற்கு எப்பொழுதும் அவர் தயார் என்ற புகழை பாதுகாப்பாக இருக்கும் இன்னெருவருக்குத் தேடிக் கொடுக்க ஆளும் கட்சி உறுப்பினர்கள் தயார் இல்லை என்பது மட்டும் நிச்சயம்.

தியாகம் என்பது மற்றவர்களின் உயிர்களிலே சவாரி விடுவது அல்ல.

## நினைவு முத்திரை

யாழ். பத்திரிசியார் கல்லூரியின் பழைய அதிபர், காலஞ்சென்ற அருட்திரு. ரி. எம். எல். லோங் நினைவாக, ஞாபகார்த்த முத்திரை ஒன்றை தபால் தந்தி அமைச்சு அடுத்த ஆண்டு முற்பகுதியில் வெளியிட உத்தேசித்துள்ளது.

இத்தகவலை பழைய மாணவர் சங்க உபதலைவர் டொக்ரர் பிலிப்பிற்கு அமைச்சு அறிவித்துள்ளது.

அமரரின் நினைவு தினம் ஞாயிற்றுக்கிழமை (30-4-89) ஆகும். அன்று பிற்பகல் 5 மணிக்கு பத்திரிசியார் கல்லூரி ஆலயத்தில் அவரது ஆத்ம சாந்திக்காக திருப்பலி ஒப்புக் கொடுக்கப்படும்.

அருட் திரு. லோங், யாழ். பொதுசன நூலகத்தைக் கட்டியெழுப்புவதற்கு வேண்டிய நிதியினைத் திரட்டுவதில் முன்னணி வகித்தவர் என்பது, நினைவு கூரத்தக்கது.

## மன்னாரில் மாதர் பணிகளுக்கென தனிச் செயலகம்

மன்னார் துயர் துடைப்பு மறுவாழ்வுச் சங்கம் தனது 1989ஆம் ஆண்டு செயல் திட்டங்களில் மாதர்களுக்கென பல திட்டங்களை வகுத்து நோர்வே அகதிகள் கழகம், சிறுவர் பாதுகாப்பு நிதியம் யாழ். அகதிகள் புனர்வாழ்வுக் கழகம் போன்றவற்றிற்கு அனுப்பியுள்ளது. இதில் முதலாவதாக மாதர்களுக்கென ஓர் தனிச் செயலகம் ஒன்றை உருவாக்கி அதை சுயமாக இயங்க வைத்துள்ளது. இச் செயலகத்தில் அண்மையில் கிராமிய மாதர்களை ஒன்று கூட்டி தாய் சங்கம் ஒன்றை உருவாக்கியது, இதற்கு மன்னர் மாதர் அபிவிருத்த் ஒன்றியம்'' என பெயரிட்டுள்ளது.

இதில் இந்து, கிறிஸ்தவ, முஸ்லிம், மெதடிஸ்த சபை மாதர்கள் அங்கம் வகிக்கின்றனர்.

இச் செயலகத்தில் மாதர்களின் கைப்பணி, விவசாய, மீன்பிடி உற்பத்திப் பொருட்களை ஒவ்வொரு போயாதினத்தன்றும் காட்சிக்கும், விற்பனைக்கும் விடப்படும். மாதந்தோறும் இரண்டு கருத்தரங்குகளை நடாத்த திட்டமிடப்பட்டுள்ளது. இதற்கு மன்னர் மாவட்டத்தில் பல சேவைகளில் ஈடுபட்டுள்ள வெளிநாட்டு மாதர்கள் உதவியும், ஒத்தாசையும் புரிவதற்கு ஒத்துக்கொண்டுள்ளனர்.

### பேச்சு . . .

( 1ஆம் பக்கத் தொடர்ச்சி )

அரசு-புலிகள் பேச்சுவார்த்தையால் தமிழர்களின் அடிப்படை உரிமைகள் பாதுகாக்கப்பட்டு சமாதானமும் ஏற்படுமானல் அது பெரும் மன நிறைவைத் தரும்.

—அ. அமிர்தலிங்கம், (த.வி.கூ. செயலாளர் நாயகம்)

நடைபெறும் பேச்சுக்களுக்கும் எமக்கும் எதுவித தொடர்பும் இல்லை ஆனல் மகிழ்ச்சிக்குரியது.

— ஈரோஸ் அறிக்கை.

விடுதலைப் புலிகள் பேச்சு வார்த்தைக்கு இணங்கியதனை ஈழம் தேசிய ஜனநாயக விடுதலை முன்னணி வரவேற்கிறது

— ஐ. யசோதரன். (மாகாண சபை உறுப்பினர்)

இலங்கை அரசாங்கத்துக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையே நடை பெறவுள்ள பேச்சு வார்த்தையை இந்திய அரசு வரவேற்கிறது.

இந்திய வெளியுறவுத்துறை அதிகாரி.

### பேச்சு. கி. மா. . . .

( 1ஆம் பக்கத் தொடர்ச்சி)

திருகோணமலையைப் பொறுத்தவரை அமைதிப் படை வாபஸ் பெறப்பட்டால் அங்குள்ள தமிழ் மக்கள், படுபயங்கரமாக சிங்கள மக்களாலும் சிங்கள இராணுவத்தாலும் கொலை செய்யப்படக் கூடும். ஆகவே பேச்சு வார்த்தையில் ஈடுபடும் தமிழ்ப் பிரதிநிதிகள் இவை பற்றி யோசித்து ஆக்கபூர்வமான தீர்வுகளை முன் வைக்க வேண்டும்.

## யாழ்ப்பாணத்தில் கோழி வளர்ப்போர் படும் பாடு

கோழித்தீன் விலை ஏறிக் கொண்டு போகின்றது. ஆனல் முட்டையின் விலை வீழ்ச்சியடைந்து வருகின்றது.

யாழ்ப்பாணத்தில் கோழிப் பண்ணைகளை சிறிதளவில் நடாத்தி வருபவர்கள் எதிர்கொள்ளும் முக்கிய பிரச்சினை இதுவே.

இன்று முட்டையின் சந்தை விலை ரூ. 1.35க்கும் ரூ. 1.40க்கும் இடையில் ஏறி இறங்குகிறது.

ஒரு பக்கட் கோழித்தீன் விலை இப்பொழுது ரூ. 168/-

முட்டையின் சந்தை விலை 1.50 ஆக உயர்ந்தால் கையும் கணக்கும் சரியாக இருக்கும். சந்தை விலை ரூ. 1.75 ஆக உயர்ந்தால், இலாபமாக 25 சதம் தேறும் என கோழி வளர்ப்போர் கூறுகின்றனர்.

50 கோழிகளை வளர்ப்பவர் ஒரு நாளைக்கு கோழித்தீனிக்கு ரூ. 40/- செலவழிக்க வேண்டியிருக்கின்றது. 200 கோழிகளை வளர்ப்பவர்க்கு ஒரு நாளைக்கு ஒரு பக்கட் கோழித்தீன் தேவைப்படுகின்றது. (ரூ. 168/-)

முட்டை விலை அதிகரித்தால், உள்ளூர் பாவனையாளர்களுக்குச் சங்கடம் என்பதனை ஏற்றுக்கொள்ளும் இச் சிறு பண்ணையாளர், அதற்கு மாற்று வழியும் கூறுகின்றனர்.

இன்று சிறிய அளவில் கோழித்தீனை யாழ்ப்பாணத்தில் உள்ள சிறு நிறுவனங்கள் உற்பத்தி செய்து வருகின்றன. ஆனல் கொழும்பில் உள்ள ஓர் பெரிய பல் தேசக் கம்பனியின் தயாரிப்புக்கு இவர்களால் ஈடுகொடுக்க முடியவில்லை.

யாழ்ப்பாணத்திலே இன்று உடனடியாக கோழித்தீன் உற்பத்திச்சாலை நிறுவப்பட வேண்டும் என அவர்கள் வற்புறுத்துகின்றனர்.

கோழித்தீன் தயாரிக்க வேண்டிய மூலப்பொருட்கள் — சோழம், தவிடு, மீன்தூள் — வடபகுதியில் போதிய அளவு கிடைக்கக்கூடியனவாய் இருக்கின்றன. முன்னர் மீன்தூள் வடபகுதியில் இருந்து தெற்கிற்கு அனுப்பப்பட்டது என்பதனை இவர்கள் சுட்டிக் காட்டுகின்றனர்.

முட்டைகளைச் சேகரித்து, சந்தைப்படுத்தி, ஆகக்குறைந்த விலையை நிர்ணயிப்பதற்கு இங்கு ஓர் அமைப்பு இல்லை. அத்தகைய அமைப்பு இன்றியமையாதது என்பதனையும் இவர்கள் அழுத்துகின்றனர்.

இப்பத்திரிகை, இல. 118, 4ஆம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணத்திலுள்ள நியூஈரா பப்ளிகேஷன்ஸ் நிறுவனத்தால் 27-4-1989இல் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது
Registered as a newspaper at the General Post Office, Sri Lanka, Under Q. J. 78/89.